★ விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

(1958 — வெள்ளி விழா ஆண்டு — 1983)

மலர் 25 கார்த்திகை 23 ரபி.அவ் 3 இதழ் 298
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9 12-83

## அமெரிக்க அதிகாரி நாடு கடத்தல்!
## இந்தியாவில் உளவு வேலை பார்த்தாராம்!

புதுடில்லி, டிச. 8

இந்தியாவில் உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகக் கருதப்படும் அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவரை இந்தியா நாடுகடத்தியுள்ளது.

ஆசிய பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் மத்திய புலனாய்வுத்துறையை [சி. ஐ ஏ.] சேர்ந்த இந்த அதிகாரி இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் தங்கியிருந்து உளவு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும், இதுதொடர்பான செய்தி இந்திய அரசுக்கு எட்டியபோது அவர் உடனடியாக நாடுகடத்தப்பட்டார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

[சூ]

## பிரேம்நஸீர் திடீர் விஜயம்

(இ கந்தசாமி)

பிரபல மலையாள நடிகர் பிரேம்நஸீர் (54 வயது) நேற்று கொழும்புக்கு திடீர் விஜயம் செய்திருந்தார்.

மத்திய கிழக்கு நாடான பாஹ்ரைனில் நடைபெறும் பாராராட்டு விழாவில் கலந்து கொள்ள அங்கு செல்லும் வழியில் கொழும்புக்கு நேற்று மாலை வந்துசேர்ந்த இவர் நேற்றிரவே பாஹ்ரைன் புறப்பட்டார்

நான் அவரை நேற்றிரவு சந்தித்தபோது; ''இலங்கையைப் பற்றி அண்மையில் பல மோசமான செய்திகள் அறிந்த போதிலும் இப்பொழுது அமைதியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக அறிகின்றேன். குழப்பம் நீங்கி, மக்கள் ஒற்றுமையுடனும் அன்புடனும் வாழும் நிலை வர வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்'' என்ற பிரேம் நஸீர்; அரசியலில் தாம் குதிக்கப்போவதாகவும் 86 பொதுத் தேர்தலில் போட்டியிடப் போவதாகவும் கூறினார்.

● நேற்று அதிகாலை நிகழ்ந்த கொள்ளையின் எதிரொலி

# பல்கலைக்கழகக் கல்லூரி

# பரீட்சை ஒத்திவைப்பு!

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு பல்கலைக்கழகக் கல்லூரி பரீட்சை திடீரென ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியில் நேற்று அதிகாலையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்தைத் தொடர்ந்து பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவிருந்தன.

## தொலைபேசி இயங்கவில்லை! கட்டணமோ ரூ. 27 ஆயிரம்!

(யாழ்ப்பாணம்)

வடபகுதிப் பொலிஸ் நிலையமொன்றில் கடந்த மூன்று மாதங்களாக தொலைபேசி இயங்கவில்லை. ஆனல் தொலைபேசிக் கட்டணமோ இருபத்து ஏழாயிரம் ரூபாவாக கணக்கிடப்பட்டுள்ளது!

இச்சம்பவம் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் நிகழ்ந்துள்ளது

இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையில், மூன்று மாதங்களாக பொலிஸ் நிலையத்தில் தொலைபேசி இயங்கவில்லை என்றும், ஆனல் பொலிஸ் நிலையத்துக்குரிய தொலைபேசித் தொடர்பை வேறு நபர் சட்டவிரோதமாகப் பெற்று முடியுமான

(10-ம் பக்கம் பார்க்க)

கிராமியக் கைத்தொழில் அமைச்சின்

# மேலதிக செயலாளரின் லிபியா விஜயம்!

(கொழும்பு)

''கிராமியக் கைத்தொழில் அமைச்சின் மேலதிக செயலாளர் ஒருவர் லிபியாவுக்குச் சென்று இனப்பிரச்னை பற்றி பேசியிருக்கிறர். இப்படிச் செய்வது நாட்டுக்கு நல்லதல்ல.''

இவ்வாறு அத்தனகலை எம். பி. திரு. லக்ஷ்மன்ஜெயக்கொடி பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் பேசுகையில் கூறினர்.

கிராமிய கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான குழுநிலை விவாதம் நேற்று நடைபெற்றபோது திரு. ஜெயக்கொடி தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'அமைச்சர் தொண்டமான் நேர்மையானவர், கண்ணியம் மிக்கவர். ஆனல் அமைச்சின் அதிகாரிகள் சிலரைப்பற்றி அவருக்கு தெரியவில்லை. அதிகாரிகள் சிலர் லிபியா சென்று

[10-ம் பக்கம் பார்க்க]

## சபையில் ஏற்பட்ட சலசலப்பு!

(இ. கந்தசாமி)

பாராளுமன்றத்தில் கிராமிய கைத்தொழில் அமைச்சின் நிதி ஒதுக்கீடுமீதான குழுநிலை விவாதம் நேற்றுக்காலை ஆரம்பமான போது அமைச்சரோ பிரதி அமைச்சரோ சபையில் இருக்காததால், சில நிமிடங்கள் சலசலப்பு ஏற்பட்டது.

பாராளுமன்றம் நேற்றுக் காலை 10-00 மணிக்கு கூடியதும் வாய்மூல விடைகளுக்கான நேரம் 10 நிமிடங்களில் முடிவடைந்ததால் 10-10க்கு விவாதம் ஆரம்பமானது. விவாதத்தை ஆரம்பித்து அத்தனகலை எம் பி திரு லக்ஷ்மன் ஜெயக்

(10ம் பக்கம் பார்க்க)

To be released on

16-12-83

CINTA
JOURNAL

An English Fortnightly

PUBLISHED BY:

Ceylon Institute of National and Tamil Affairs

AGENTS CONTACT:

66, Chapel Street, Jaffna.

10433

★ ஊரெழு உதயணன் விவகாரம்:

# உதவிப்பொலிஸ் அதிபருக்கு 'வாரண்ட்' பிறப்பிப்பு!

(மாவிட்டபுரம்)

ஊரெழு வாலிபர் உதயணனை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக் கோரும் மனுவின் விசாரணைக்கு சமூகமளிக்கத் தவறிய யாழ் உதவிப் பொலிஸ் அதிபருக்கு மல்லாகம் நீதிபதியால் 'வாரண்ட்' பிறப்பிக்கப் பட்டது

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த இராசையா உதயணன் என்னும் வாலிபர் சுன்னகம் பொலிசில்சரண் புகுந்ததையடுத்து ஒரு மாதத்திற்கு மேலாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படாமல் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளதால் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யக்கோரி அவரது மனைவி வசந்தமலரால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது

[10-ம் பக்கம் பார்க்க]

# இரகசிய தமிழ் வானெலி இந்தியாவில் இயங்குகிறதா?

## இந்தியத் தூதுவர் மறுப்பு

(கொழும்பு)

இந்தியாவில், இரகசிய தமிழ் வானெலி ஒலிபரப்பு நிலையமொன்று இயங்கிவருகிறதென்ற இலங்கைப் பத்திரிகைகள் வெளியிட்ட குற்றச்சாட்டை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. சத்வால் மறுத்துள்ளார்.

கொழும்புப் பத்திரிகைகள் சில இது தொடர்பாகக் குற்றம்சாட்டியிருந்தன.

இக் குற்றச்சாட்டையடுத்து இந்தியா முழுவதும் இது தொடர்பான விசாரணை நடத்தப்பட்டதாகவும். இம்மாதிரியான இரகசியவானெலி ஒலிபரப்பு நிலையமெதுவும் இந்தியாவில் இல்லையென்றும்

[10ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

கே.கே.எஸ். வீதியில் (மில்க் வைற் தொழிற்சாலைக்கு அருகாமையில் - மதவடி லேன்) 2 பரப்பு 3½க்குளி காணி வீட்டுடன் உடன் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு: க. சிவசுப்பிரமணியம், 24/4, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். 10441

திரு. வி. செல்வரத்தினம் அவர்களால் தொகுக்கப்பெற்ற கணித விஞ்ஞான வாய்பாடுகள் என்னும் நூல் மீண்டும் வெளிவந்து விற்பனையாகின்றது. இந்நூலில் சூத்திரங்கள், மடக்கைகள், திரிகோண கணித வாய்ப்பாடுகள், விதிகள், புதிய கணித குறியீடுகள் யாவும் சேர்க்கப்பெற்றுள்ளது. திருத்திய புதிய பதிப்பாக யாழ்பாணம் ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலையினரின் வெளியீடான இந்நூலின் விலை ரூபா 14-50. 10439

வியாபாரிகளே! பாவனையாளர்களே! உங்களுக்குத்தேவையான 'ஷொப்பிங் பாக்கை' Shopping Bags) மிகமலிவான விலையில் பெற்றுக்கொள்ள லங்கெக்ஸ்போ ஸ்தாபனத்தாரை நாடுங்கள்: லங்கெக்ஸ்போ (Lankexpo) இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு. 10449

தெல்லிப்பளை வறுத்தலைவிளான் பிள்ளையார் கோவிலிற்குஅருகாமையில் 15பரப்பு காணி உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: க. அரியநாயகம், சட்டத்தரணி ஏழாலைமேற்கு, ஏழாலை. 10430

யாழ்ப்பாணம், அத்தியடி, அம்பலவாணர் வீதியில் 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: திருநாவுக்கரசு அரசு மோட்டர் வேக்ஸ், 294, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10428

சங்கரத்தை வட்டுக்கோட்டையில் 24 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. (மரக்கலம் பிட்டி) தொடர்பு: திரு. க. சோமசுந்தரம் 14, சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம், 10426

4½ பரப்பு குடியிருக்க உகந்த காணி, கைதடி மேற்கில் விற்பனைக்கு உண்டு. விபரங்களை அறிய திரு. ப. முத்துக்குமாரசாமி சிரேஷ்ட தபால் அதிபர், மணிபல்லவம், கைதடியுடன் தொடர்புகொள்ளவும். 10407

இங்கிலிஷ் பிறீமியர் கிறைண்டிங் மெஷின்கள் ஒன்று 12'' மற்றையது 10'', ஒரு 10 H.P. இண்டியன் புதிய மோட்டர், Mem ஸ்ராட்டர், 60 Amp மெயின் சுவிச் மிகவும் நல்ல நிலைமையில் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு:- ஆயர்பாடி ஜோதிட நிலையம், மடத்தடி, தெல்லிப்பளை. 10397

உடன் நடுகைக்கேற்ற கத்தரி, தக்காளி, மிளகாய் M. I. L. நாற்றுகள் எம்மிடம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: Unifo-யூனிபோ, பலாலி வீதி, உரும்பிராய். 10412

10/7 சிவன் கோவில் வீதி, திருநெல்வேலியில் நான்கு அறை உள்ள வீடு விற்பனைக்குண்டு. மேல்காணும் விலாசத்தில் அல்லது K. ஜயேந்திரன், 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி. யாழ்ப்பாணத்தில் உடன் தொடர்பு கொள்ளவும். 10270

## விற்பனைக்கு

195 வாடகைக்கு விடப்படும் இரும்புக்கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. கோபால், மெயின் வீதி, சங்கானை. 10361

உடுவில், அம்பலவாணர் வீதியில், 7 பரப்புக் காணியுடன் சகல வசதியுடனான வீடு விற்பனைக்குண்டு. கல்வியன்காடு இராசபாதையில் 2½ பரப்புக் காணியும் டச்றோட், கோப்பாய் தெற்கில் 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி) யாழ்ப்பாணம். 10391

## தேவை

ஒப்பந்த அடிப்படையில் பொலிஷிங் (Polishing) வேலை செய்வதற்கு அனுபவம் வாய்ந்த ஆட்கள் தேவை. நேரில் வரவும் ஸ்ரான்லி பேர்ணிஷிங் பலஸ், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10415

எட்டாம் வகுப்புக்குட்பட்ட கல்வியறிவுடன் வெளிவேலைப் பெண் பணியாளர் தேவை. விபரங்களுடன் விண்ணப்பிக்கவேண்டிய முகவரி: விளம்பர இல. 10416, ஈழநாடு, யாழ்ப்பாணம். 10416

## தவறிவிட்டது

சென்றமாதம் எனது கல்வித்தகைமை சான்றிதழ்கள் உட்பட பெறுமதிமிக்க தஸ்தாவேஜுக்கள் போட்டோப்பிரதிகளுடன் யாழ். ஆஸ்பத்திரிவீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ஒப்படைப்பின் தகுந்த சன்மானம் வழங்கப்படும். A. C. குணரட்ணம், 46/4 1வது ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ். நகர். 10429

எனது அடையாள அட்டை சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து ஒப்படைக்கவும். அல்லது தகவல் தரவும். சன்மானம் வழங்கப்படும். திருமதி பரமேஸ்வரி செல்லையா, கட்டுடை, மானிப்பாய். 10434

## வாடகைக்கு

திருநெல்வேலி சந்தியில் பார்மஸி, ஸ்ரூடியோ அல்லது மதுபானக்கடை போடக்கூடிய கடை உடனடியாக வாடைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும். விலாசம்: ஷோபா ஏஜென்சி லிமிற்றட், 194, கே.கே. எஸ். வீதி, சுன்னாகம். 10382

கே. கே. எஸ். வீதி, சி.எஸ்.கே. சந்திக்கருகில், தொலைபேசி மற்றும் சகல வசதிகளுடன் எந்த வியாபாரமும் உடன் ஆரம்பிக்கக் கூடியதான கடை வாடகைக்குண்டு. தொடர்பு: மல்ரி சேவிசஸ், 37 (351) மணிக்கூட்டு வீதி, (வெலிங்டன் தியேட்டர் சந்தி), யாழ்ப்பாணம். 10392

## வைத்தியம்

மனநோய், அல்சர், மூலம், சர்மரோகங்கள், நரம்புத்தளர்ச்சி எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் V. T. சந்திரன் 218/5 பலாலி ரோட், கந்தர்மடம். 10355

## கல்வி

சர்வதேச புகழ் மிக்க சான்றிதழுக்குரிய ஒருமாதகால வெல்டிங், வயரிங், மோட்டார் மெக்கானிச வகுப்புகள் ஆரம்பமாகின்றன. J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 10421

Spoken English, Welding, Radio and Electronic Engineering உடன் தொடர்பு கொள்க; நிர்வாகி, யாழ்ப்பாண கல்விநிலையம், சாந்தி சினிமா அருகாண்மை, யாழ்ப்பாணம். 10423

## சேவை

புதிய பழைய படங்கள் வெளிவந்துள்ளன. இன்றே அங்கத்துவம் பெறுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10269

கலர் பிலிம்ஸ் சுருள்களைச் சிறந்த முறையில் Processing and Printing செய்துகொள்ள யாழ்ப்பாணம் கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். 10309

## EDUCATION

ICMA Professional I Section B and Chartered Prelim. weekend classes. Lectures in all subjects but students can enroll for any single subject they desire. Time table suits combination if needed. Special course in Data Processing only for London I A A PART II - Vannniasingham M.Sc.(Econ)(London) B Com (London) Vairavar Kadadcham, Palaly Road, Thirunelvely, Jaffna. Phone: 24424 10379

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த யோகவனம் சர்வானந்தசாமி பெண் நாகபூசனியம்மாவின் மரணசாதனமில்லாச் சொத்துக்களின் விடயத்தில்.

காலஞ்சென்றவர்

வழ. இல: ரி. 3762

யோகவனம் சர்வானந்தசாமி, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

— மனுதாரி

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1983ம் ஆண்டு மார்கழி மாதம் 16ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர்தோன்றிஅவ்வாறு பதியப்பட்டபின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படல் ஆகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

1983ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி
ஒப்பம்
கு. குலசிங்கம்
பதிவாளர்.

வரைதல்:
ஒப்பம்
செ. மகேசன்
மனுதாரின் சட்டத்தரணி
10387

## பயிற்சி

மோட்டார் மெக்கானிஷம்- எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் பயிற்சிகள் 12-12-1983ல் ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியறிங் ரெக்னொலொஜி 11B மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10324

## பூசகர் தேவை

சங்குவேலி உடுவில் வெட்டுக்கட்டைப் பிள்ளையார் தேவஸ்தானத்திற்குநற்குணமும், சபையின் கட்டுப்பாட்டினை ஏற்றுநடக்கக் கூடியவருமான பூசகர் தேவை. மிகுதி விபரம் நேரில்.11-12-83ஞாயிற்றுக்கிழமை காலை 10-00 மணிக்கு மேற்படி தேவஸ்தானத்திற்கு நேரில் வரவும்.

செயலாளர்
10424 நிர்வாகசபை.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## முதலாவது உப வரவு செலவுத் திட்டம் — 1983

1983ஆம் வருடத்திற்குரிய யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் முதலாவது உப வரவு செலவுத் திட்டம். 1983ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16-ஆம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்குவைக்கப்படுமென, மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) 214(2)(பி) பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
07-12-1983. 10431

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## வலி கிழக்கு வடபகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி

## வெற்று பரல் விற்பனைக்கு

மேற்படி சங்கத்தில் பாவிக்கப்பட்ட வெற்றுப்பரல் 50 (ஐம்பது) விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிட விரும்புவோர் அவற்றை எமது சங்கக் காரியாலய வேலை நேரத்தில் 24-12-83-ந் திகதிக்கு முன்னர் வந்து பார்வையிட்டு, தாங்களே விண்ணப்பப்படிவத்தை தயாரித்து, 28-12-83ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என் வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுபரல் கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
வலிகிழக்கு வடபகுதி
பலநோக்கக் கூட்டுறவுச்
10445 சங்கம், அச்சுவேலி

## வலி கிழக்கு வடபகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி

## வெற்றுச்சாக்கு விற்பனைக்கு

மேற்படி சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட சுமார் 10000 (பத்தாயிரம்) வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்க விரும்புவோர்கேள்வி வைப்புப்பணமாகரூபா100/-ம், மீளத்தகாத பணமாக ரூபா 5/-ம் சங்கக் காரியாலயத்தில் 24 12.83ந் திகதிக்கு முன்கட்டி விண்ணப்பபடிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை 28. 2.83ந் திகதிக்குப் பிந்தாமல் பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

விண்ணப்பிக்கும்போது என் வலப்பின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம் என்று குறிப்பிடல் வேண்டும்.

பொது முகாமையாளர்.
வலிகிழக்கு வடபகுதி
பல நோக்கக் கூட்டுறவுச்
10444 சங்கம், அச்சுவேலி.

## உடன் ஆட்கள் தேவை

யாழ்நகரிலுள்ள பெற்றோல் நிலையத்திற்கு அனுபவம் உள்ள சேர்வீஸ் செய்வோர், பம்பஸ் தேவை. உங்கள் அனுபவ அத்தாட்சிப் பத்திரங்களுடன் உடன் நேரில் சமூகமளிக்கவும். அனுபவத்திற்கேற்ற வேதனம் வழங்கப்படும்.

திருமதி J. C. S. பத்மநாதன்
இல: 21. மணிக்கூட்டு வீதி,
10448 யாழ்ப்பாணம்.




**பிரயாணச் சீட்டுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.**

# "சர்வதேசப் பயங்கரவாதம்
# உலக அமைதிக்கு ஆபத்தானது
## ஐ. நா. இதற்குத் தீர்வுகாணவேண்டும்"!

### இந்தியா கோரிக்கை

நியூயோர்க், டிச. 8

**உலகில் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் சர்வதேச பயங்கரவாதத்தினை நிறுத்துவதற்குத் தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்தியா ஐ.நா. சபையிடம் கோரியுள்ளது.**

ஐ. நா. சட்டக் கமிட்டியின் கூட்டத் தொடரில் நேற்று உரையாற்றிய இந்தியப் பிரதிநிதி திரு. மணிசங்கர ஐயர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

"கடந்த காலங்களைவிடத் தற்போது உலக நாடுகளில் பயங்கரவாதம் அதிகரித்துவருகிறது. இப்போது இது உச்ச கட்டத்தை அடைந்துள்ளது. சென்ற அக்டோபரில் பர்மாவில் நடந்த குண்டுவெடிப்பு இதற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. இத்தகைய பயங்கரவாத நடவடிக்கைகள் உலக நாடுகளிடையே அமைதியைக் கெடுத்துவிடுகிறது. நாடுகளின் நட்புறவு, ஒத்துழைப்பு, பரஸ்பர தொடர்பு என்பவற்றினைக் குறைத்து, நாடுகளிடையே தொடர்ச்சியான மோதல்களைத் தோற்றுவித்து சர்வதேச பதட்ட நிலையை உண்டுபண்ணுகிறது. இறுதியில் இவையெல்லாம் சேர்ந்து யுத்தமாக மாற வழிவகுக்கின்றது. உலக நாடுகளும், பல்வேறு தாபனங்களும் இப்பிரச்னையைப் பயங்கரவாதம் என்ற போர்வையில் நோக்கி, அதற்குத் தீர்வாகப் பயங்கரவாத நடவடிக்கைகளையே முன்வைக்கின்றன. இந்த நிலைமை தவிர்க்கப்படல் வேண்டும். உண்மையில் சர்வதேச பயங்கரவாத நடவடிக்கைகள் சில, முற்றிய பிரச்னைகளின் எதிரொலியாகவே இடம்பெறுகின்றன. எனவே உலகநாடுகள் முதலில் இப்பிரச்னைகளைத் தீர்க்க முன்வர வேண்டும். இப்பிரச்னைகள் தீர்க்கப்படும் பட்சத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளும் நிறுத்தப்படலாம். பயங்கர நடவடிக்கைகளுக்கான பிரச்னைகளை இனங்காணுவதே சிக்கலானதாகும். இதுவிஷயத்தில் ஐ. நா. சபைதகுந்தமுறையில் இனங்கண்டுசரியான தீர்வுகளை முன்வைக்கவேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார். [சூ]

---

# சோவியத் ஏவுகணை அபாயம்: 'நேட்டோ' ஆராய்ந்தது!

பிரசல்ஸ், டிச.8

'நேட்டோ நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் பிரசல்ஸில் நடைபெற்றபோது ஆயுதப் போட்டா போட்டி குறித்து விரிவாக ஆராயப்பட்டது

கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் அமெரிக்க ஏவுகணைகளுக்குப் பதிலடியாகச் சோவியத் யூனியன் அமைக்க உத்தேசித்துள்ள ஏவுகணைகளின் அபாயம்பற்றி இக்கூட்டத்தில் ஆராயப்பட்டதுடன் இதற்கு நேட்டோ மேற்கொள்ளவேண்டிய எதிர் நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. [சூ]

---

### சென்னைப் பல்கலைக்கழகத்தில்
# 'அண்ணயிசம்' தனிப்பாடநெறி!

சென்னை, டிச. 8

சென்னைப் பல்கலைக்கழத்தில் "அண்ணயிசம்" என்ற தனிப் பாடத் துறையொன்று உருவாக்கப்படவுள்ளது.

இதற்காக மாநில அரசு முதற்கட்டமாக 21 லட்சம் ரூபாவினை ஒதுக்கீடுசெய்துள்ளதுடன் இத்துறைக்கு மேலும் நிதி ஒதுக்கீடுசெய்யப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்ணாவின் வாழ்க்கை வரலாறு, அவர் பரப்பிய கொள்கைகள், அதனுல் ஏற்பட்ட பயன்களைப்பற்றி ஆராய்ச்சிகள் இந்தப் பாடநெறியில் இடம்பெறவுள்ளன. [சூ]

---

# சோவியத்-இந்திய வர்த்தகக் கழகம்!

புதுடில்லி, டிச. 8

சோவியத் யூனியனும் இந்தியாவும் வர்த்தக நடவடிக்கைகளை அதிகரிக்கும் முகமாக வர்த்தகக் கூட்டுக் கழகம் ஒன்றினை அமைக்க உத்தேசித்துள்ளன.

இந்தியா வந்திருக்கும் சோவியத் முதலாவது துணைப் பிரதமருடன் இந்திய வர்த்தக அமைச்சர் திரு பி. ரி. சிங் நடத்திய இரு தரப்பு வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் இதுபற்றி ஆராயப்பட்டது.

இச்சபை அமைப்பது பெருமளவுக்குச் சாத்தியமாகிவிட்டதாகப் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. சோவியத் யூனியனுடன் அதிகளவான வர்த்தகத்தினை மேற்கொள்ளும் நாடு இந்தியாவாகும். [சூ]

---


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
### உல்லாச பஸ் சேவை

தினசரி மாலை 7-45
கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 7-45
யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு
கண்ணியமான - பாதுகாப்பான பஸ் சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

1. **ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
   இல: 82, கன்னதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 24310
2. **யாழ் மெற்றல் சேல்ஸ் சென்ரர்**
   இல: 6, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 23596
3. **நியூ ப்ரசீதா**
   இல: 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
   தொலைபேசி இல: 22480
4. **யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்**
   இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
   தொலைபேசி: 22537, 22370

கொழும்பில் டிக்கட் பெறுமிடங்கள்

1. ஹோம் பிறுன்ஸ் லிமிட்.
463, காலி வீதி,
கொழும்பு-3
தொலைபேசி: 589190—587680

ஸ்ரீ மணிமலர் ஸ்ரோர்ஸ்
157/2, ஸ்ரீ கதிரேசன்வீதி,
கொழும்பு-11.
தொலைபேசி: 23277


---

### ராஜஸ்தானில் பாரிய கைத்தொழில் ஆலை

[ஜெய்பூர்]

ராஜஸ்தான் மாநிலத்தில் மிகப்பெரிய கைத்தறி ஆலையொன்று அமைக்கப்படவுள்ளது

இந்திய அரசின் பொதுத் துறை முயற்சியாக அமைக்கப்படும் இந்த ஆலையில் 10,000 இயந்திரக் கைத்தறிகள் அமைக்கப்படும். இதில் சுமார் 25,000 பேர் வேலைவாய்ப்புப் பெறவுள்ளனர். [சூ]

---

### இந்திய- அமெரிக்க கலாசார ஒப்பந்தம்

புதுடில்லி, டிச 8

இந்தியாவும் அமெரிக்காவும் மூன்று ஆண்டுகளுக்கான கலாசார ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் ஒரு நாடு மற்ற நாடுபற்றி குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கலாசாரம் சம்பந்தமான கருத்தரங்குகள், பொருட் காட்சிகள், நாட்டிய நிகழ்ச்சிகள் என்பவற்றினை ஒழுங்கு செய்து நடத்தவுள்ளன.

இதுதொடர்பான அறிக்கை அண்மையில் புதுடில்லியில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது. [சூ]

---

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6 02 | 'எனது பெயர்'...... உலகச் சிறுவர்களை அறிமுகஞ் செய்யும் நிகழ்ச்சி |
| 6 30 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 7.00 | செய்திகள் (தமிழ்) |
| 7.15 | ஹட்டன் நஷனல் வங்கி தலைமையகத் திறப்பு விழா நிகழ்ச்சி |
| 7 45 | நகைச் சுவைச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 8.15 | செய்திகள் (சிங்களம்) |
| 8.30 | கலைஞர்கள் பற்றிய நிகழ்ச்சி (சிங்களம்) |
| 9 00 | ஆங்கில த்திரைப் படம் |
| 9.30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9 50 | திரைப்படத் [தொடர்ச்சி] |

---

### சி. வை. தா. ஆய்வுநூல் டிசம்பர் 18ல் வெளியாகும்

(யாழ்ப்பாணம்)

திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய 'சி. வை. தாமோதரம்பிள்ளை-ஓர் ஆய்வு நோக்கு' என்ற நூல் இம் மாதம் பதினெட்டாந் திகதி வெளியாகவிருக்கிறது. இவ் வைபவத்தில் கலாநிதி அ. சண்முகதாஸ் கலந்து கொள்வார். கைலாசபதி நினைவாக டிசம்பர் 6ல் வெளியாகவிருந்த இந்நூல் தவிர்க்கமுடியாத காரணங்களினுல் 18ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

## வவனியா செய்திகள்

ரி. விவேகராசா

### வன்னியன் சிலைப்பகுதி புனரமைப்பு

வவனியா கச்சேரியில் அமைக்கப்பட்டுள்ள மாவீரன் பண்டார வன்னியனின் சிலையை சுற்றியுள்ள பகுதி 24 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. வவனியாவுக்கு வரவிருக்கும் ஜனுதிபதியின் வருகைக்கு முன்பாக வேலைகள் யாவும் பூர்த்தி செய்யப்பட விருப்பதாகத் தெரிய வருகிறது.

1982 ஜூலை மாதம் குறித்த சிலை அங்கு நிறுவப்பட்டு சிலை திறப்புவிழா நடந்தது சிலையை சுற்றியுள்ள பகுதிகளின் திருத்த வேலைக்கு மேற்படி தொகை செலவிடப் படவுள்ளது.

### வெளியேற்றுவதை தடுக்க வேண்டும்

"வவனியா பகுதியிலிருந்து இந்திய வம்சாவழிகளை அவர்கள் குடியேறியுள்ள காணிகளிலிருந்து வெளியேற்றுவதை தடுக்க வேண்டும்" என்று கோரும் தீர்மானம் வவனியா இ. தொ. கா. மாவட்டக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு தீர்மானம் தொடர்பான நீண்ட தொரு விபர மகஜர் ஜனுதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக வடபிராந்திய இ. தொ. கா. பொறுப்பதிகாரி திரு. பி. மருதப்பிள்ளை தெரிவித்தார். மாவட்ட அலுவலகத்தில் கூட்டம் திரு. ஏ. குருசாமி தலைமையில் நடந்தது.

### நாவலர் விழா

நாவலர் விழாவும் புத்தகக் கண் காட்சியும் வவனியாவில் மிகவும் சிறப்பான முறையில் நடந்தேறியது.

வவனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் விழா மன்ற கட்டிடத்தில் நடைபெற்றது. நாவலர் தொடர்பான கட்டுரை, பேச்சுப் போட்டிகளும் நடந்து போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ மாணவிகளுக்கு மன்றத்தலைவர் திரு. கா. லோகசிங்கம் பரிகிசில்களை வழங்கினுர். வவனியா கவிதாஸ் ஸ்ரோர்ஸ் நிறுவனத்தினர் பரிசில்களை அன்பளிப்பு செய்துள்ளனர்.

### அடையாள வேலைநிறுத்த எச்சரிக்கை

வ, தெ. த. பி. பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில் பொது முகாமையாளராக கடமையாற்றி தற்போது இருவருட காலமாக வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட முன்னுள் பொது முகாமையாளர் திரு. எஸ். ஜெயரத்தினத்துக்கு வரும் 19-ம் திகதிக்கு முன் வேலை வழங்கப்படாது விட்டால் இம் மாதம் 20-ம் திகதி அடையாள வேலை நிறுத்தம் செய்வதாக வவனியா கூட்டுறவு ஊழியர் சங்கத் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

தொழிற் சங்க கூட்டம் சுத்தானந்த இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடந்தது 48 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். திரு. பி செகராசசேகரம் தலைமையில் கூட்டம் நடை பெற்றது.

"வெங்காயம் கொள்முதல் செய்ததினுல் சங்கத்துக்கு ஒன்றரை லட்சம் ரூபா நட்டம் ஏற்பட்டது. கூட்டுறவு உதவி ஆணையாளர் இது தொடர்பாக ஓர் விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டுமென்று கோரும்

[8-ம் பக்கம் பார்க்க]

## மணிவாக்கு

பணத்தைக் கொண்டு எதனை வாங்கவும், அன்பால் எதனைப் பெற்றுக் கொள்ளவும் வசதிபடைத்த பெருஞ் செல்வர்களே சில வேளைகளில் வாழ்க்கையில் கலங்கி வெறுப்படைகின்றனர்; இத்தகைய நெருக்கடியில் தெய்வதரிசனம் மிகவும் வேண்டத்தக்கது. அதற்குவழி பிரார்த்தனை.

— மகாத்மாகாந்தி

# காரைநகர், நீலிப்பந்தனை துர்க்கைஅம்மன்குடமுழுக்கு

## இன்று மண்டலாபிஷேகம்



நாம் வாழும் வாழ்க்கை வேறு; நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கை வேறு. நாம் இன்று சமயம்வேறு, வாழ்க்கை நடைமுறைவேறு என்ற சிந்தனையில் வாழ்கிறோம். ஆனல் நமது முன்னேர்கள் சமய வாழ்க்கையை மையமாகக் கொண்ட சமுதாய வாழ்க்கையே வாழ்ந்தார்கள்.

'சக்திவழிபாடு உலகில் மிகப் பழைய வழிபாடென்பது பெரியோரின் ஆராய்ச்சிக் கருத்து.

வீரம் செல்வம், கல்விஎன்ற முப்பெரும் பொருட்களை வெவ்வேறு சக்திகளாகக் கொண்டு வழிபட்டபோதும் இம்மூன்றும் உலக அன்னை உமாதேவியாரின் முப்பெரும் தோற்றமே என்ற முடிவு சக்தி வழிபாட்டின் மூலக் கருத்தாகும்.

உலக அன்னையே எங்கள் நீலிப்பந்தனை அம்மை; நீலிப்பந்தனையென்ற பழம்பெரும் பதியிலே அவ்வூர் மக்களின்குல தெய்வமென்று வணங்கப்பட்டு வருகிறார்

ஈழத்துச் சிதம்பரமென்று அழைக்கப்படும் காரைநகர் திண்ணபுரத்தில் கோயில் கொண்டிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரரின் அருளாட்சியில் வாழும் மக்கள் எம்பெருமானும் உமாதேவியாரும் தலைமைதாங்கும் இந்நகரத்தில் அவர்களின் திருவருளைப் பிரதிபலிக்கும் வகையில் மூன்று அம்மன் கோவில்கள் வடபகுதியாகிய வலந்தலையில் மிகப் பழமையான மரபில் பரிபாலிக்கப்பட்டு வந்திருக்கின்றன.

இன்று ஒரு புது சகாப்தம் ஆரம்பமானதுபோல் மூன்றும் ஒன்றன்பின் ஒன்ருகப் புதுக்கக் கட்டப்பட்டு கும்பாபிஷேக மறுமலர்ச்சி பெற்றிருக்கின்றன.

இந்த அடிப்படையில் 45 நாளாக நடந்துவரும் கும்பாபிஷேகம், நீலிப்பந்தனை அம்மையின் இன்றைய மண்டலாபிஷேகத்துடன் நிறைவெய்துகின்றது.

நீலிப்பந்தனையில் 1870-ல் ஒரு மடாலயமாக ஆரம்பமான அம்பிகை வழிபாடு இன்றைய துர்க்காதேவி ஆலயத்திற்கு வழிகோலியது.

புதிய கட்டிடங்கள், விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் கோவில்கள், மூலத்தானத்தில் புதுக்கப் பிரதிஷ்டைசெய்யப்பட்ட கல்லில் செருக்கப்பட்டு, இந்தியாவிலிருந்து பெறப்பட்ட அழகான அருள் ததும்பும் ஸ்ரீதுர்க்கா மூலமூர்த்தியும் மூலமூர்த்திக்கு முன்னரே கோவில்கொண்டிருக்கும் அலங்கார மூர்த்தியின் புதுப் பொலிவும் அதிகரித்த செல்வாக்கும் அருளை வாரி வழங்குகின்றன.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிதென்ற பழமையான கூற்றுக்கு இலக்கணமாக அமைந்த இம்மடாலயம் இன்று முழுமை பெற்ற தேவாலயமாகத் திகழ்வது அடியார்களின் பக்தியாலும், நிர்வாகத்தின் அக்கறையும் அதிகரித்த மக்கள் ஒத்துழைப்பின் பெருவிளைவே.

பல லட்சம் ரூபாவில் கட்டியெழுப்பப்பட்ட இவ்வாலயம் சுமார் ஒரு லட்சம்ரூபாயென்று மதிப்பிடக்கூடிய சிரமதான வேலையை அவ்வூர் இளைஞர் சமுதாயத்திலிருந்து பெற்றிருப்பது கோவிலின் வருங்காலம் ஒளி பொருந்தியதாகும் என்பதற்கு நல்ல அறிகுறி

அம்பாளைத் தமது தெய்வமாகக் கொண்ட இக்கிராம மக்களும் கலியுகத்தின் கஷ்டம் நிறைந்த இக்கட்டத்தில் அம்பாளிடம் கல்வியையும், வீரத்தையும், செல்வத்தையும் பெரிதும் வேண்டிநிற்கும் அடியார்கள் அனைவரும் இன்று அதிகரித்துவரும் நிர்வாகப் பணிக்குத் தம் ஒத்துழைப்பை நல்கி துன்பம் நீங்கிச் சிறப்புற வாழ வேண்டுமென எல்லாம் வல்ல ஈஸ்வரியைப் பிரார்த்திப்போமாக.

-கதிரவேலு ஸ்ரீகரன்

## 5000 நிதி உதவி

(மன்னர்)

மன்னர் மாவட்டத்தில் இயங்கிவரும் கிராமோதய சபைகளுக்கு அபிவிருத்தி நிதியாக தலா 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது இதற்குத் தேவையான நிதி பன்முக வரவுசெலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும்.

## மைலாப்பூரில் கைலாசபதி நினைவு விழா

[சென்னை]

அமரர் பேராசிரியர் கே. கைலாசபதியின் ஓராண்டு நினைவு விழா மைலாப்பூரிலுள்ள சீனிவாசக சாஸ்திரி அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் வா. வே. குழந்தைசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் டாக்டர் நா. தெய்வசுந்தரம், இலங்கை நாவலாசிரியர் செ. கணேசலிங்கன் தமிழ்க்கடல் ஆகியோர் நினைவுரை நிகழ்த்தினர். தமிழக-ஈழ நட்புறவுக்கழகம் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது. (கு)

## 10குடும்பங்களுக்கு புனர்வாழ்வு

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமிலுள்ள பத்துக் குடும்பங்களுக்கு முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள சிலாவத்தை எனும் இடத்தில் புனர்வாழ்வு அளிக்கப்படவுள்ளது.

## வெள்ளிச் சிந்தனை

### மெய்யன்பு

— அருளாளன் —

மகாத்மா காந்தி ஒருகணித மேதையுடன் உரையாடிக் கொண்டிருந்தார். இடைஇடையே ராமநாமத்தையும் சொல்லிக்கொண்டிருந்தார்.

அதுகண்ட கணிதமேதை ஒரேநாமத்தை, திரும்பத்திரும்பச் சொல்வதால் அலுப்புத் தட்டாதா? என்றார். அதற்கு மகாத்மா காந்தி பதிலாக வேறொரு கேள்வியைக் கேட்டார். 1 முதல் 9 வரையான எண்களை வைத்துத் திரும்பத் திரும்பக்கணக்குகள் செய்வதால் உங்களுக்கு அலுப்புத் தட்டுவதில்லையா? என்றார்.

கணிதமேதை எண்கள் ஒன்றாகவே இருந்தாலும் விடைகள் வேறாகவேவரும். அதனால் அலுப்புத்தட்டுவதற்குப்பதில் ஊக்கம் மிகுதியாகவே இருக்கும் என்றார். உடனே காந்தியும் ஒரே நாமத்தை திருப்பத்திருப்பச் சொன்னாலும் ஒவ்வொருமுறையும் புதிய அனுபவத்தையே பெறுகிறேன். சிறிது சிறிதாக இறைவனை சமீபிப்பதாகவே உணர்கின்றேன். ஆதலால் இறைநாமத்தைச் சொல்லச் சொல்ல மகிழ்ச்சியும் கிளர்ச்சியும் புதிய அனுபவமும் உண்டாகின்றனவே தவிர அலுப்புத்தட்டுவதில்லை என்றாராம்.

பிறர்கண்டு மதிப்பதற்காகவும், மனம் இறைவனை நினைக்காமல் பிறவற்றை நினைக்கும் போதும் இறை நாமத்தை சொல்லுவது அலுப்புத்தட்டும். இறைவனை நினைத்து மகிழ்ந்தபடி இறைநாமத்தைச்சொல்லுவது இன்பத்தையேதரும். புராண படனவிதி எழுதிய போது நாவலர் உண்மை அன்பர்களின் மூன்றுதரங்களை பற்றி குறிப்பிட்டுள்ளார் - இறைவனுடைய நாமத்தைச் சொல்லும் போதும் கேட்கும் போது பரவசப்படுபவர் 1ம் தரம். இறைவனுடையபுகழை விரித்து இசையுடன் பாடும் போது பரவசப்படுபவர் 2ம் தரம். அன்பர்கள் இறைவனின் அருட்செயல்களை மிக விரிவாகவும் உணர்ச்சிவசப் படும்வகையிலும் உணரும்படியான புராணங்களைக்கேட்கும் போது பரவசப்படுவோர் 3ம் தர அன்பர்கள்.

இந்த மூன்று வகையுள்ளும் சேராத பலர் இக்காலத்தில் தாம் உண்மை அன்பர்கள் என்றும் தம்பொருட்டு இறைவன் இரங்கித் தங்கள்குறை தீர்க்கவில்லை என்றும் கூறுவதை நாம் சாதாரணமாகக் கேட்கலாம்.

இப்படியான 3வகை அன்பர்களுள் ஒருவகையினையாவது அடையவேண்டும் என்ற ஆவலாலும், மூன்றுவது நிலைகூட நமக்கு வரவில்லையே என்ற கவலையினாலும் வருந்தியபடி இறைவனை வணங்கி மெய்யன்பைப்பெற முயல்வதும் 1ம் தரமானஇறை நாமங்களைக்கேட்டும் சொல்லியும் பரவசமாகிய இறையின்பத்தை அடையமுயல்வதும் ஒவ்வொருவருக்கும் சிறந்த கடமையாகும்.

''பரந்து பல்ஆய் மலரிட்டு
முட்டாதிறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே
பெறலாம் என்னும் அன்பர்
உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே
நின்றன் வார்கழற்கண்
பெனக்கு
நிரந்தரமாய் அருளாய்
நின்னை
ஏத்தமுழுவதுமே
— மாணிக்கவாசகர்,

# நமதுநோக்கு

## பின் போடப்பட்ட பாதயாத்திரை

பாடல் பெற்ற [illegible]கதிர்காமத்திலிருந்து ஆரம்பமான சர்வோதயத் தலைவர் ஏ. ரீ. ஆரியரத்னவின் பாதயாத்திரை திசமஹாராமையில் நிறுத்தப்பட்டது மிக விவேகமான தீர்மானம்.

ஜனதிபதி ஜெயவர்த்தனவின் இந்தப் பணிப்புரை நியாயமானது; போதிய காரணத்தால் அது விடுக்கப்பட்டது

இந்த நாட்டில் ''பாதயாத்திரை 'தேசிய ஒற்றுமை' 'இன ஐக்கியம்' 'தேசிய ஒருமைப்பாடு' போன்ற பதங்கள் பலருக்கு பல தருணங்களில் பலவிதமான கருத்துக்களைக் குறிக்கின்றன.

கடந்த கால கசப்பான அனுபவங்களே இதற்கு சான்ருக உள்ளன.

டாக்டர் ஆரியரத்தின மிக உயரிய நோக்கங்களுடன் இதனை ஆரம்பித்திருக்கலாம். ஆனல் பாதயாத்திரைகள் சில அவ்வித நோக்கங்கொண்டவையேனும் இடையில் தடுத்து நிறுத்தப்பட்டது எமக்கு நினைவிலிருக்கிறது.

'நரகத்தின் வழிநல்ல நோக்கங்களாலே அமைக்கப்பட்டுள்ளன' என்ற ஆங்கிலப் பழமொழியை இவ்வேளையில் நினைவு கூர்வது நலம். இன்றைய நிலையில் பாதயாத்திரை போன்ற பாரதூரமான பயணம் தீமையில் முடிந்து விடலாம்.

ஜனதிபதி ஜெயவர்த்தன அவர்கள் இந்த எச்சரிக்கையே முன்கூட்டி விடுத்திருக்கிறார்; இன்று அதற்கு அவசியம் அதிகரித்திருக்கிறது.

நாட்டின் இன்றைய நிலைமை டாக்டர் ஆரியரத்னவை நன்ருக ஏமாற்றி விட்டது

ஏன் இவ்வாறு கூறுகின்றோம்?

டாக்டர் ஆரியரத்ன கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தின் நல்ல நட்பையும் வரவேற்பையும் பெற்றிருந்த சர்வோதயத் தொண்டன். கடந்த சில வருடங்களில் அவருடைய புகழ் — தனித்துவ சேவையால் சம்பாதித்த புகழ் — சர்வதேச நிலைக்கு எட்டிவிட்டது. அவருடைய புகழ் நாட்டிலும், வேற்று நாடுகளிலும் உயர உயர, யாழ்ப்பாணத்தில் அது தேய்ந்து வந்தது, நாம் கண்ட அனுபவம்.

அதனை எவ்வாறு விளக்குவது? எவ்வித அரசியல் கலப்பு மற்ற இந்த மகத்தான சேவை, இன்று அரசியல் சால்புடையதென்று இப்பகுதி மக்கள் கருத்தாயிருக்கலாம்.

அது எவ்வாருயினும், அவர் பாத யாத்திரைக்கு முன்னேடியாக மேற்கொண்ட யாழ்ப்பாண விஜயம் வெற்றியளிக்கவில்லையென்பது தெளிவு.

எங்கள் பத்திரிகை அவருடைய பாத யாத்திரைக்கு நல்ல ஆதரவு அளிக்குமென்று வெளியான செய்தி தவருனதாகும்.

கடந்தமாதம் 21ம் தேதி 'சன்' பத்திரிகையில் இத்தவருன செய்தி இடம்பெற்றிருக்கிறது. நாமே நல்லாகப் பழகிய டாக்டர் ஆரியரத்னவைச் சந்திக்க முடியவில்லை பத்திரிகை நிருபரின் பேட்டியே எங்கள் பத்திரிகையில் பிரபலமாகப் பிரசுரிக்கப்பட்டது; அதனை வாசித்த எவரும் குறிப்பிட்ட பாத யாத்திரைக்கு எங்கள் பத்திரிகையோ அல்லது இப்பகுதி மக்களோ பேராதரவு அளிப்பதாகக் கருதமாட்டார்.

ஒன்று உண்மை; யாழ்ப்பாண மக்கள் இதனை எதிர்க்கமாட்டார்கள்; தம் சிங்கள சமூகத்தில் சில விஷமிகளுக்கேதான் அஞ்சுவதாகத் தெரிவித்தார்

இது முற்றிலும்உண்மை. இதனை ஜனதிபதி அறிந்தே அவரையும் அவருடைய சகாக்களையும் பாதுகாக்கும நோக்குடன் இதனைப் பின்போடவேண்டுமென்று பணித்திருக்கிறார்.

எனவே தொல்லை தெற்கில்தான் உண்டு. இதனை மற்றைய தலைவர்களும் உணர்ந்து ஆவன செய்தால் அகால ''வடக்கிருத்தல்'' மீண்டும் ஏற்படாது தடுக்கலாம்.

இன்று வடக்கில் எந்த சிங்களத் தலைவரும் எவ்வித அச்சமுமின்றி வந்து போகலம்; என்ன விழாவையும் அமைக்கலாம்; அதனைத் தமிழ் மக்கள் ஆதரவுஎன்று கருதப்படுவது தவறு; இராணுவ அதிகாரத்தில அடங்கியிருக்கும் இப்பகுதிமக்கள் மௌனம் சாதிப்பது நிர்ப்பந்தமாகிவிட்டது.

பின்போடப்பட்ட பாதயாத்திரை சிங்கள மக்கள் மத்தியில் நட்புறவை வளர்க்க வேண்டும்; இன்று நாட்டில் நடந்தது, நடப்பதென்ன; யார் செய்தனர்; ஏனிந்த அவலநிலை என்பது பற்றி சிங்களப் பொது மக்கள், பெருமக்கள் ஒன்றும் அறியார்.

எனவே விடயத்தை விளக்கி அவர்களின் ஆதரவைத்திரட்டி இவ்வித பெருந்தூரப் பயணத்துக்கு தம்மைஅர்ப்பணிக்கும் சமாதானப்படையினர் பயணத்தை 'நாகதீப'வில் தொடங்கி நெடுங்காலம் இந்துக்கள் மறந்திருந்த கதிர்காமத்தை அடைய வேண்டும்.

அதுவே தேசிய ஒற்றுமைக்கு உதவ வல்லது.



யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்திச்சபை புலோலி உப-அலுவலக பொதுசன நூலகத்தில் நடைபெற்ற மரம்நாட்டும் விழாவிற்கு உப-அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு எம். அருளானந்தம் தலைமைவகித்து உரையாற்றிக் கொண்டிருப்பதையும், அருகில் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும், புலோலி விவசாயப் போதனாசிரியர் திரு. கே. கிருஸ்ணபிள்ளை உப-அலுவலக பொதுசன நூலகப் பொறுப்பாளர் திரு. எஸ். திருச்செல்வம் வடமராட்சி கால்நடைவைத்திய அதிகாரி, டாக்டர் ரீ. கதிரவேற்பிள்ளை, புலோலி ப நோ. கூ. சங்க இயக்குநர் சபைத் தலைவர் திரு. வே. கதிர்காமலிங்கம், ஆகியோரையும் முதலாவது படத்திலும், மரம்நாட்டும் விழாவிலே கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (படம்: வரதன்)

# தபாலகங்களில் விழிப்பு குழுக்களின் பங்களிப்பு

(மானிப்பாய்)

''தபாலகங்களால் விழிப்புக் குழுக்கள் இயங்கவேண்டியது முக்கியம். ஒய்வூதியம் போன்ற பெருங் கொடுப்பனவுகள் தபாற்கந்தோர்களில் இடம் பெறும்போது விழிப்புக்குழுக்கள் பெரும் உதவி புரியலாம். பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம். இக்குழுக்கள் அமைதியின்மையைப் போக்க பெரிதும் உதவுகின்றன.

உரும்பராய் தபாற் கந்தோரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பெற்ற தபாலகவிழிப்புக்குழுக் கூட்டத்தில் உரையாற்றிய மாகாண அஞ்சல் அத்தியட்சகர் திரு. கே. மகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் திரு. இ. அருளானந்தனின் குறிப்புக்களை அடுத்து தபாலதிபர் திரு. சு. மயில்வாகனம் உட்படப் பலர் உரையாற்றினர்.

உரும்பராய் தபாலக விழிப்புப் குழுவின் தலைவராக ஒய்வு பெற்ற பொறியியலாளர் திரு. வ. அழகரத்தினமும், காரியதரிசியாக ஒய்வுபெற்ற பொலிஸ் பரிசோதகரும், மரண விசாரணை அதிகாரியுமான திரு. கு. கந்தையாவும்' சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

விழிப்புக்குழு உறுப்பினர்கள் தொடர்ந்து செய்யக்கூடிய பயணிகள்பற்றி எடுத்துக் கூறினர்.

## கரவெட்டி பகுதியில்
# பொலிஸ் - பொதுமக்கள்
## நட்புறவை வளர்க்க நடவடிக்கை

(புலோலி)

பொலிஸ் - பொதுமக்களிடையே நல்லுறவினை ஏற்படுத்துவதற்கான கூட்டம் அண்மையில் கரவெட்டியில் நடைபெற்றபோது பொலிஸ் பொதுமக்களிடையே நல்லுறவு இருக்கவேண்டிதன் அவசியத்தை கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் எடுத்துரைத்தனர்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை தலைமையில நடைபெற்ற இக் கூட்டத்தில் இப்பகுதியிலுள்ள 14 கிராமசேவகர்கள், விசேட சேவை உத்தியோகத்தர்கள் பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. கே. மகேந்திரன், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. சந்திரசேகரா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் பொலிஸ்-பொதுமக்கள் தொடர்புசபை அமைப்பாளரான சாஜன்ட் திரு. க. புண்ணியமூர்த்தி பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவு எவ்வாறு அமைந்திருக்க வேண்டுமென்றும், எடுத்து விளக்கினார்.

கிராமசேவகர்கள் இக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையில் பொலிசார் சந்தேக நபர்களை கைது செய்ய வரும்போது தமது உதவியை நாடுவதில்லையென்றும் மாறாக சில தீய நபர்களின் உதவியை நாடுகின்றார்களென்றும் அதே போல் பொதுமக்களும் பொலிசாரிடம் செல்லும் போது தமது உதவியைப் பெறாது வேறு நபர்களின் உதவியைத் தான் நாடுகிறார்கள் என்றும் குறைபட்டுக் கொண்டனர்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய பருத்தித்துறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி கே. கே. மகேந்திரன்''இப்பகுதியிலுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள், மற்றும் பிரமுகர்களை அழைத்து மாதம் 3 முறை இத்தகைய கூட்டங்களை நடத்த ஒழுங்கு செய்ய உள்ளதாகவும் இதன் மூலம் இருசாராரும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ முடியுமென்றும் தெரிவித்தார்.

சார்ஜன்ட் புண்ணியமூர்த்தி நன்றி தெரிவித்துப் பேசுகையில், இம்முயற்சி பெற்றிபெற சகல மக்களும் ஒத்துழைப்புத் தருமாறுகேட்டுக்கொண்டார்.

இதேபோன்று பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்கூட்டம்மான்று இம்மாதம் 4-ம் திகதி காங்கேசன்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற விருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சூ)

# வவனியாவில்வீடுகள்அமைக்க 5 ஆயிரம் ரூபா கடன் உதவி

(வவனியா)

அரசாங்கத்தின் பத்து லட்சம் வீடுகளை அமைக்கும் திட்டத்தின்கீழ் வீடுகள் அமைப்பது தொடர்பாக வவனியா தெற்கு தமிழ் பகுதிகளிலும் வீடு அமைக்கவும், திருத்த வேலைகள், குறைநிரப்பு வேலைகள்செய்யவும் ஐயாயிரம் ரூபா கடன் நடுத்தர வகுப்பினர்களுக்கு அரசாங்கம் வழங்க இருக்கிறது.

வீடமைப்புக் கடன் உதவி பெற விரும்புபவர்கள் தத்தம் பகுதி கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஊடாக சம்பந்தப் பட்டவர்களுக்கு அனுப்பும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சொந்தக்காணி உள்ளவராகவும் இங்கு நிரந்தரமாக இருக்கும் இலங்கையராகவும் இருக்க வேண்டும்.

அத்துடன் வேறு இடத்தில் கடன் உதவி கோருபவருக்கு நிரந்தர வீடு இருக்கக்கூடாது 3600 ரூபாவுக்கு மேல் வருட வருமானம் இருக்கவேண்டுமென அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த தகமையுள்ளவர் மட்டுமே கடன்உதவிபெற தகுதியுடையவர் என தெரிய வருகின்றது,

வவனியா பகுதியில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுக்கும் 250 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. (சூ)

# பொலிஸ் — பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கள்
## யாழ். மாவட்டத்தில் அடுத்த மாதம் முதல் இயங்கும்

(மாவிட்டபுரம்)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பொலிஸ் பிரிவுகளிலும் அடுத்தமாதம் முதல் பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக் குழுக்கள் செயல்படஉள்ளன.

யாழ். மாவட்டத்தில் பல பொலிஸ் பொதுமக்கள் நல்லுறவுக்குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளதுடன் ஏனைய பொலிஸ் பிரிவுகளிலும் இக் குழுக்களை அமைக்கும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப் பட்டுள்ளன.

யாழ், பொலிஸ் அதிபர் திரு. ஆனந்தராஜாவின் பணிப்பின் பேரில் பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு உத்தியோகத்தர் திரு. க. புண்ணியமூர்த்தி இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார். அடுத்த மாதம் முதல் சகல பொலிஸ்-பிரிவுகளிலும் பொதுமக்கள் நல்லுறவுக்குழுக்கள் இயங்க ஆரம்பிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் இவ்வாறான குழுக்களை அமைப்பது தொடர்பாக காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில், காங்கேசன்துறை

(6-ம் பக்கம் பார்க்க)

# சத்துள்ள உணவு வகைகளை தயாரிக்கும் பயிற்சிவேண்டும்

(கரவெட்டி)

''போசாக்குள்ள உணவுகளை உட்கொண்டால் மாத்திரம் போதாது. சுத்தமான முறையில் வாழவும் பழகிக் கொள்ளவேண்டும்''

இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற உணவுப் போசாக்குத் திட்ட பயிற்சிநெறியாளர்களுக்கு தராதரப்பத்திரம் வழங்கு வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கரவெட்டி உதவி அரச அதிபர் திரு. இ. ஐயாத்துரை தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் திரு.நேசையா மேலும் பேசுகையில் கூறியதாவது,

''வருமானம் குறைந்தவர்களுக்கு அவர்கள் பெறக்கூடிய மூலப்பொருட்களிலிருந்து சத்துள்ள உணவு வகைகளைத் தயாரிக்கக்கூடிய முறைகளை இப்பயிற்சியாளர்கள் தாங்கள் பெற்றபயிற்சியின் அடிப்படையில் அயலில் உள்ளவர்களுக்கும் கற்றுக்கொடுக்கவேண்டும்'' என்றார்.

வளர்ந்தோர் கல்வியதிகாரி திரு. கே. சுப்பிரமணியம், மாவட்ட சுகாதார அத்தியட்சகர் திருமதி சிவசுப்பிரமணியம், யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சுவாமிநாதன் ஆகியோரும் உரையாற்றினார்கள். 120 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (சூ)


உங்கள் குடும்பத்தினர் உணவை விரும்பிச் சுவைப்பதன் இரகசியம் அஜி-நொ-மோட்டோ!




உங்கள் சமையலை குடும்பத்திலுள்ள அனைவரும் ஆவலுடன் உண்ண வேண்டும் என்று விரும்புகிறீர்களா? இன்றே, அஜி-நொ- மோட்டோவின் துணையை நாடுங்கள். அஜி-நொ-மோட்டோ நீங்கள் சமைக்கும் உணவின் இயற்கைச் சுவையைப் பெருக்குகின்றது. கறி, சோறு, சம்பல், சூப் முதலிய எவ்வகை உணவிலும் சேர்க்கலாம். கரும்பு, பீட்றூட், மரவள்ளி ஆகியவற்றின் இயற்கை மாப்பொருளில் இருந்து, பெறப்படும் அஜி-நொ-மோட்டோவை 80 நாடுகளில் 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் பாவிக்கிறார்கள்.

சந்தைப்படுத்துவோர்: கேவ்ஸ் சந்தைப்படுத்தும் பிரிவு

விலை: ரூ.1/20 ல் இருந்து

அஜி-நொ-மோட்டோ®

உங்கள் உணவின் சுவையை அதிகரிக்கிறது.

Minds/AJM 0005

# டிக்கட்இன்றி பயணம்செய்த 32 பேர் பிடிபட்டனர்

[வவனியா]

இ. போ. ச. பஸ்ஸில் டிக்கட் இன்றிப் பயணஞ் செய்த 32 பிரயாணிகள் திடீர் சோதனையின்போது அகப்பட்டனர்.

மத்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான குறித்த பஸ் வண்டி கலஓயாவிலிருந்து கொழும்பு நோக்கி 116 பிரயாணிகளும் சென்றபோது கலஓயா என்ற இடத்தில் வைத்து இ. போ. ச' திடீர் பரிசோதகர்களினுல் டிக்கட் சோதனையிட்டபோது 32 பிரயாணிகள் டிக்கட் இல்லாமல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

திடீர் பரிசோதகர் திரு. தியாகராஜா தலைமையிலான குழுவே இதனைக் கண்டுபிடித்தது.

அப்போது குறித்த பஸ்ஸில் நடத்துனராகக் கடமை புரிந்தவர் உடனடியாகத் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என மேற்படி திடீர் பரிசோதனைக்குழுத் தலைமை அதிகாரி திரு. தியாகராஜா தெரிவித்துள்ளார்.

## ஆனைக்கோட்டை சனசமூகநிலைய உறுப்பினர்

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தின் நடப்பு வருட புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

காப்பாளர் திரு. யோ சி. அருளானந்தம், தலைவர் திரு. எஸ். சுகுமார், உபதலைவர் திரு த. செபரட்ணம், செயலாளர் திரு இ இராஜரட்ணம், உப செயலாளர் திரு சி. அன்ரன், பொருளாளர் திரு. செ. ஜெயச்சந்திரன் உப பொருளாளர்கள் திருவாளர்கள் தே. தாதீஸ், ம. யோகதாசன்.

விளையாட்டுத்தலைவர் திரு. ம அமலதாசன். உபவிளையாட்டுத்தலைவர் திரு. அ. தியானமுத்து, பாலர்பாடசாலை தலைவர் திரு. மி. பேரின்பநாயகம், பாலர் பாடசாலை உபதலைவர் திரு. யோ. அல்பிரட், கணக்குப்பரிசோதகர் திரு. தே. சிமியோன்.

செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்கள் யோ. கீதபொன்கலம், ம. யேசுதாசன், அ. ஞானமுத்து, செ. இராசநாயகம்.

## 'கிராம வளர்ச்சிக்கு இளைஞர்கள் உதவ முன்வர வேண்டும்'

(மாவிட்டபுரம்)

"இளைஞர்களிடையே சேவை மனப்பான்மையை வளர்த்து கிராம வளர்ச்சியில் அவர்களை ஈடுபடுத்தும் நோக்குடனேயே கிராம ரீதியில் தேசிய சேவை இளைஞர் மன்ற இளைஞர் கழகங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகவே கிராமங்கள் தோறும் இந்த இளைஞர் கழகங்கள் அமைத்து அவற்றின் மூலம் கிராம எழுச்சிக்கு வழி சமைக்க இளைஞர்கள் முனவரவேண்டும்."

இவ்வாறு தேசிய சேவை இளைஞர் மன்ற அதிகாரி திரு. வே. விவேகானந்தன் மயிலிட்டி தெற்கு கிராமத்தில் இளைஞர் கழகமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இளைஞர் கழக அமைப்பில் கூட்டாகச செயல்படுவதன் மூலம் ஐக்கியமும், புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் வளரமுடியும். இவ்வாறு செயல்படுவதால் சமூகத்திற்கு சேவையாற்றுவதுடன் தமது பல்வேறு ஆற்றல்களையும் வளர்த்துக்கொள்ள முடியும். தேசிய சேவை இளைஞர்மன்ற கருத்தரங்குகள், விளையாட்டுப்பயிற்சிகள், சுயதொழில் பயிற்சிகளை இளைஞர் பரிமாற்றத்திட்டங்கள் போன்றவற்றில் பங்குபற்றி தமது திறமையை வளர்க்க இக்கழகங்கள் வாய்ப்பாகஅமைகின்றன. அத்துடன் தொழில் வாய்ப்புகள். நிதியுதவிகளையும் பெற வசதி உண்டு, "கிராமங்கள் தோறும் இவ்வாறான இளைஞர் கழகங்களை அமைத்து செயல்படுத்த வேண்டியது அவசியம்" என்றார், (வெ)

## பொலிஸ்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. பிலி அபயசிங்கா தலைமையில் நடந்த கூட்டத்தில் ஆராயப்பட்டது. இப்பொலிஸ் பிரிவில் உள்ளகிராம சேவையாளர்பிரிவுகள்தோறும் 7 பேர் கொண்ட குழுக்களை அமைப்பதெனவும், அவற்றை ஒன்றிணைத்து மத்தியகுழுவை அமைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டு அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொலிஸ்-பொதுமக்கள் நல்லுறவுக்குழுக்கள் மூலம் கிராமங்களில் ஏற்படும் சிறுசிறு சச்சரவுகளை உடனடியாக சமரசமாக தீர்த்துவைக்கவும், கொள்ளைச்சம்பவங்களை தடுக்கவும், கொள்ளையர்களை கண்டுபிடிக்கவும் பெரிதும் உதவியாக இருக்குமென தெரிவிக்கப்படுகிறது.

# 'யுனெஸ்கோ' உதவியுடன் புதிய பாடநெறி அறிமுகம்

(பண்டத்தரிப்பு)

அடுத்த ஆண்டில் கல்வி அமைச்சு 'யுனெஸ்கோ' கல்வித் திட்டத்தின் அனுசரணையுடன் 'வாழ்க்கைத் திறன்' என்னும் தொழில் முன்னிலைப் பாடங்களை பாடசாலைகளில் அறிமுகப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

வட்டுக்கோட்டைத் தொகுதியில் இந்த தொழில் முன்னிலைப் பாடங்களைப் போதிப்பதற்கு பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி, காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் மகா வித்தியாலயம் ஆகிய கல்லூரிகள் கல்வித்திணைக்களத்தினுல் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் இக்கல்லூரிகளில் தொழில் நுட்ப பாடங்களுக்கு உதவிகள் வழங்கல் ஆசிரியர் பயிற்சி உபகரணங்கள் வழங்கல், தொழிற்கூட அபிவிருத்தி போன்ற பல திட்டங்கள் செயற்படுமென்று இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

## சிறுகைத்தொழில் அபிவிருத்தி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் சிறிய நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் முன்னேற்றம் பற்றியகருத்தரங்குயாழ் நவீன சந்தை மேல்மாடியில் இம் மாதம் 10ம் தேதி காலை நடைபெறவிருக்கிறது.

ஆலோசக, நிதி அபிவிருத்தி கம்பனியினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக்கருத்தரங்கு திரு. ஏ. சோமசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

(9ம் பக்கம் பார்க்க)




ZENITH

பிரகாசமான இயற்கை வர்ணங்களை அளித்து மகிழ்ச்சியை உண்டு பண்ணும் உன்னத டெலிவிஷன்களை அளிப்பது பிலிப்ஸ்

நம்பகரமான நீண்ட ஆயுள்கொண்ட பிலிப்ஸ் வர்ண டெலிவிஷனின் சிறப்பம்சங்கள்

- உள்ளடக்கப்பட்ட வோல்டேஜ் சமநிலைமானி
- உஷ்ண மண்டல பிரதேசங்களுக்கு உகந்த உருவ அமைப்பு
- தன்னியக்க ஒலி, ஒளி கட்டுப்படுத்தும் சுழல் முறுக்கிகள்
- தெளிவான விம்பம்
- சக்தியுள்ள ஒலிக்கு விசேட டபிள்கோண் முறை ஒலி அமைப்பு
- VCR. வீடியோ விளையாட்டுக்கள் வீடியோ புல்க் ஆகியவற்றிற்கான இணைப்புகள்

நீங்கள் பிலிப்ஸ் டெலிவிஷனை தேர்ந்தெடுக்கும்போது - நவீன தொழில் நுட்ப வேலைப்பாடுகளுக்கமைய உருவாக்கப்பட்ட சிறந்த டெலிவிஷனை வாங்கிறோம் என்ற பெருமையை அடைவீர்கள்

இலங்கையில் ஏக விநியோகஸ்தர்கள்

HAYLEYS

ஹேய்லீஸ் லிமிட்டெட்.

சேவைப்பிரிவு: 25, போஸ்ரர் ஒழுங்கை, கொழும்பு 10. தொலைபேசி: 91181-9
காட்சியறை: 646, காலி வீதி, கொழும்பு-3. தொலைபேசி: 86958
சுங்கவரி நீக்கப்பட்ட விற்பனை நிலையம், 2, சிம்மாடி, கொழும்பு-3.

PHILIPS

நாம் பிலிப்ஸ் உடன் இணைந்து சிறந்ததையே வழங்குவோம்

PHILIPS

இலகு தவணையில் செலுத்த ஒழுங்கு செய்யப்படும்

கலர் TV
14'' 287 டாலர் ரூபா 11,400/-
16'' 325 டாலர் ரூபா 12,500/-
20'' 400 டாலர் ரூபா 15,500/-
26'' 700 டாலர் ரூபா 22,000/-
உத்தரவாத காலங்கள்...

கறுப்பு/வெள்ளை TV
12'' 90 டாலர் ரூபா 2,975/-
14'' 112 டாலர் ரூபா 3,750/-
17'' 148 டாலர் ரூபா 5,800/-
ரெலிவிஷன் செற்ஸ் - 1 வருடம்

பிலிப்ஸ் VHS வீடியோ கஸெற் றெக்கோடர் 420 டாலர் 'TC'
காட்சிக் குழல்-3 வருடங்கள்

## யாழ். சுப்பிரமணியம் பூங்காவில்

# மிருகங்கள், பறவைகள் வளர்ப்பதற்கு ஏற்பாடு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவில் சிறுவர்களையும், மாணவர்களையும் கவரக் கூடியவிதத்தில், மிருகங்களையும், பறவைகளையும் வளர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

மிருகங்களையும், பறவைகளையும் அன்பளிப்புச் செய்யவிரும்புவோரும் இந்த ஏற்பாடு தொடர்பாக ஆலோசனை தெரிவிக்க விரும்புவோரும் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

ஜனவரி முதலாம் திகதி இதனை ஆரம்பித்துவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், மான், மயில், முயல், காட்டுக்கோழி, சிறுபன்றி, குரங்கு, லவ் பேர்ட்ஸ், மணிப்புரு ஆகியவற்றை வளர்க்க ஏற்பாடுகள் செய்யப்படும். பின்னர் மீன்தொட்டிகள் கட்டி மீன்கள் வளர்க்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, சிலர் பறவைகளையும், மிருகங்களையும் அன்பளிப்பாக வழங்க முன்வந்துள்ளனர். தற்போது இப்பறவைகள் மிருகங்களையும் வளர்ப்பதற்கான கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. (க)

## இடமாற்றத்துக்கு கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடமையாற்றும் விசேட சேவை அலுவலர்கள் இடமாற்றம் பெற விரும்பினால் உடன் விண்ணப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர்கள் தமது பிரிவு விசேட சேவை அலுவலர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். [சூ]

## ரூ. 38,000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

வீட்டுக்காரர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தநேரம் பார்த்து, இனந்தெரியாத திருடர் கோஷ்டி 38,100 ரூபா பெறுமதியான நகைகளையும், ரொக்கப்பணத்தையும் திருடிச்சென்றுள்ளது!

யாழ். இரண்டாம் குறுக்கு வீதியிலுள்ள திருமதி அலோசியஸ் நவரத்தினராசா பிள்ளைநாயகம் என்பவர் வீட்டிலேயே நேற்றுமுன்தினம் இரவு இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

வீட்டுக்காரர் நேற்றுக்காலை நித்திரைவிட்டு எழுந்து பார்த்தபோது ஜன்னல் உடைக்கப்பட்டிருந்ததாகவும், பின்னர் வீட்டுக்குள் நகைகளும், ரொக்கப்பணமும் திருடப்பட்டிருந்ததாகவும் தெரியவந்ததாக யாழ். பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (மா)

## மட்டுவில் பட்டுநூல் நெசவு: விஸ்தரிக்க நடவடிக்கை!

### திருவள்ளுவர் மகாசபை முயற்சி

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கில் பட்டுநூல் நெசவை விஸ்தரிப்பதற்கான முயற்சியை திருவள்ளுவர் மகாசபை மேற்கொண்டுள்ளது.

இருபது நெசவாளர்களுக்கு பட்டுநூல் விநியோகம் கிடைக்க திருவள்ளுவர் மகாசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

மட்டுவில் வடக்கில் பெரும்பான்மையான நெசவாளர் நெசவையே தமது நாளாந்த தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்கள் மத்தியில் அண்மையில் யாழ் அரசாங்க அதிபர் சகிதம் திட்டமிடல் அமைச்சின் திட்டமிடல் அதிகாரிகள் பட்டுநூல் நெசவை அறிமுகம் செய்துவைத்தனர். இவர்களுக்கு திட்டமிடல் அமைச்சின்மூலம் இந்தியபட்டுநூல் நெசவு நிபுணர்களால் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பரீட்சார்த்திகமாக பட்டுநூல் விநியோகமும் செய்யப்பட்டது.

இதுவரை இரண்டு நெசவாளர்களுக்கு மட்டுமே கிடைத்துவந்த பட்டுநூல் விநியோகத்தை 20 நெசவாளர்களுக்கு கிடைக்கக்கூடிய முயற்சியை திருவள்ளுவர் மகாசபை தற்போது மேற்கொண்டுள்ளது. (கு)

## பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லையம்பதியில் அமைக்கப்பட்டுள்ள கல்யாண மண்டபத்தை, இந்து யாத்திரீகர்கள் மடமாக்குவதற்கு, யாழ். மாநகரசபை எடுத்துவரும் முயற்சியை நல்லூர் சங்கிலியன் மன்றம் வரவேற்றுள்ளது

யாழ். நகரில் இந்து மக்களுக்குக் குறிப்பாக அந்நிய தேசங்களிலிருந்து யாழ். பிரதேசம் வரும் இந்துயாத்திரீகர்களுக்குத், தங்குவதற்கு ஒரு யாத்திரீகர் மடம் இல்லாத குறையை. நிச்சயம், தாங்கள் அமைக்கப்போகும், புதிய இந்து யாத்திரீகர்கள் மடம் தீர்த்து வைக்கும். பல நாட்களாகக் கவனிப்பாரின்றி இருக்கும் கல்யாண மண்டபத்தை மேற்குறித்த இந்து யாத்திரீகர்கள் மடமாக்குவதற்கு எடுத்திருக்கும் தீர்மானத்தை எமது மன்றம் பாராட்டி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. இம்மன்றம் ஆணையாளருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது (சூ)

## கடற்பெருக்கினால் பயிர்ச்செய்கை பாதிப்பு!

(நெடுந்தீவு)

தற்சமயம் ஏற்பட்டிருக்கும் கடற் பெருக்கினால் புங்குடுதீவு நடுவுத்துருத்தி பகுதியில் பயிர் செய்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

பயிர்ச் செய்கை பண்ணப்பட்டிருந்த நிலங்களில் கடல் நீர் புகுந்ததால் பெருந்தொகையான வெங்காயப் பயிர்கள் சேதமடைந்துள்ளது இதனால் உற்பத்தியாளர்கள் பலத்த நஷ்டமடைந்துள்ளனர்.


# காங்கேசன் ரவல்ஸ்

## சொகுசு பஸ்சேவை

காங்கேசன்துறை-யாழ்ப்பாணம்-மட்டுநகர்-கல்முனை.

காங்கேசன்துறை-யாழ்ப்பாணம்-கொழும்பு.

எதிர்வரும் 14-12-83 புதன்கிழமை முதல் எமது

காங்கேசன்துறை-கல்முனை பஸ்சேவை

யாழ்ப்பாணம்-மட்டுநகர் ஊடாக மீண்டும் ஆரம்பமாகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தற்போதைக்கு இரவுசேவை மட்டும் செயலாற்றப்படும்.

எமது காங்கேசன்துறை-கொழும்பு பஸ்சேவை வழமைபோல் நடைபெறும். கொழும்புக்கு செல்லும் பஸ்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ண வீதி வரை செல்லும்.

காங்கேசன்துறை-கல்முனை சேவை புறப்படும் நேரங்கள் :

| | | | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை பிற்பகல் | 4 மணி | கல்முனை பிற்பகல் | 4 மணி |
| யாழ்ப்பாணம் ,, | 5-30 மணி | மட்டுநகர் ,, | 5-45 மணி |

கட்டண விபரம் :

காங்கேசன்துறை-கல்முனை / யாழ்ப்பாணம்-கல்முனை } ரூ. 80/-

காங்கேசன்துறை-மட்டுநகர் / மட்டுநகர்-காங்கேசன்துறை } ரூ. 75/-

காங்கேசன்துறை-கொழும்பு சேவை

புறப்படும் நேரம் :

| | | | |
|---|---|---|---|
| காங்கேசன்துறை-பிற்பகல் | 6 மணி | கொழும்பு கோட்டை-பிற்பகல் | 7-15 மணி |
| யாழ்ப்பாணம் - ,, | 7-30 மணி | செட்டியார்தெரு பிள்ளையார் கோவிலடி ,, | 7-30 மணி |

ஆசனம் பதிவு செய்யும் இடங்கள் :

1. காங்கேசன் ரவல்ஸ், காங்கேசன்துறை. தொலைபேசி : 34.
2. ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி : 22660.
3. இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டுநகர். தொலைபேசி: 2035.
4. முருகன் ஸ்ரோர்ஸ், மட்டுநகர். தொலைபேசி : 2630.
5. ராஜா ஸ்ரோர்ஸ், வாடிவீட்டு வீதி, கல்முனை.
6. அம்பலவாணர் அன் சன்ஸ், 78, மலிபன் வீதி, கொழும்பு-11. தொலைபேசி : 24821.
7. பேர்ள் ஹேற்ஸ், 79, மலிபன் வீதி, கொழும்பு - 11. தொலைபேசி : 28244.

**காங்கேசன் ரவல்ஸ்** 122, மெயின்வீதி, காங்கேசன்துறை.


# ரூ.48000 கடத்தல் பொருட்கள் மீட்பு!

(புலோலி)

வசாவிளானில் வான் ஒன்றில் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 48,000 ரூபா பெறுமதியான கள்ளக் கடத்தல் பொருட்களை பருத்தித்துறைப் பொலிசார் கைப்பற்றினர்.

பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே. மகேந்திரன், சார்ஜன்ட் திரு கிருஸ்ணலிங்கம் கான்ஸ்டபிள்களான சிவகுமார் பழனிவேல் விக்கினேஸ்வரன் நவரத்தினராசா ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது வீதியால் வந்து கொண்டிருந்த வான் வண்டியொன்றைச் சந்தேகத்தின் பேரில் நிறுத்திச் சோதனையிட்டபோதே இப்பொருட்கள் அகப்பட்டன.

இப்பொருட்களுடன் வான் சாரதியையும் பருத்தித்துறைப் பொலிசார் காங்கேசன்துறை சுங்கத் திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர். (சூ)

## நாவலர் தின விழா

(யாழ்ப்பாணம்

ஆறுமுகநாவலர் தினம் வரும் புதன்கிழமை யாழ் நாவலர் மகாவித்தியாலயத்தில் கொண்டாடப்படவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம் சிமியாம்பிள்ளை கலந்துகொள்கிறார்.

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. இ. சிவானந்தம், வித்துவான் திரு. சி ஆறுமுகம் ஆகியோர் சிறப்புரை ஆற்றவுள்ளனர்.

ஈழநல்லூர் ஸ்ரீ கௌரிமனோகரி சகோதரிகளின் பக்திப்பாடல் நிகழ்ச்சியும் பாடசாலை மாணவ மாணவியரின் பேச்சு, பண்ணிசை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் கர்த்தா சபையினர், நாவலர் நினைவுதினப் பேச்சுப்போட்டி. கட்டுரைப்போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுகளை வழங்குவர். (சூ)

## உலக விஷன் நிதியுதவி

(புலோலி)

உலக விஷன் ஸ்தாபனம் பொலிகண்டிகரையோர மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அபிவிருத்திக்கென 6,400 ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

உலக விஷன் ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட இந்நிதி உதவியைக் கொண்டு இக்கிராமத்தில் ஆடு வளர்ப்பு ஊக்குவிக்கப்படவுள்ளது.

அச்சுவேலி 'லதா' மர்ம மரணம்:

# 'இரத்த வெள்ளத்தில் சிறுமி இறந்துகிடந்தார்' வளர்ப்புத் தந்தை சாட்சியம்

(மாவிட்டபுரம்)

''வயலில் வேலை செய்துவிட்டு வீடு திரும்பிய சமயம் எனது வீட்டிலிருந்த சிறுமி இரத்த வெள்ளத்தில் வெட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார். வீட்டுப் படலையும் கதவும் திறந்து கிடந்தது''

இவ்வாறு அச்சுவேலிஇடைக்காட்டைச் சேர்ந்த 11 வயதுச் சிறுமி லதா சின்னத்துரையின் மரண விசாரணையில் சாட்சியமளித்த சிறுமியின் வளர்ப்புத் தந்தை நாகன் சின்னத்துரை கூறினார்.

சிறுமி லதாமர்மமானமுறையில் மரணமானது குறித்து மல்லாகம் நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் ஸ்தல விசாரணை நடத்திய சமயம் நாகன் சின்னத்துரை மேலும்சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''நான் சீவல் தொழில் செய்து வருகிறேன். அத்துடன் வயலில் களைபிடுங்கவும் செல்வதுண்டு. எனது வீடு வயலின் நடுவே இருக்கிறது. அதிலிருந்து சற்றுத் தொலைவிலேயே வேறு ஆட்கள் வாழ்கிறார்கள். சம்பவதினம் நானும் மனைவியும் வயலுக்கு வேலைக்குச் சென்றோம். எங்களுடன் மேற்படி இறந்த சிறுமியையும்நாம் அழைத்துச் செல்வதுவழக்கம். ஆனால் அவருக்கு சின்னமுத்து நோய் இருந்ததால் அன்றைய தினம் வீட்டிலேயே விட்டுச் சென்றோம். இச்சிறுமியை ஒரு வயதிலே மாங்குளத்தில் ஒருவரிடம் வாங்கிவந்து வளர்த்து வந்தேன்.

''நான் வயலில் வேலை முடிந்து மாலை 3 மணிக்கு வீடு திரும்பிய சமயம் வீட்டின் படலை திறந்திருந்தது. உள்ளே போனபோது கதவும் திறந்திருந்தது. வீட்டுக்குள் சிறுமி இரத்த வெள்ளத்தில் கிடந்தார். 11 வெட்டுக் காயங்கள் காணப்பட்டன. உடல் குளிர்ந்த நிலையில் இருந்தது. வெளியில் தூக்கிவந்து பார்த்தேன். அவர் இறந்து கிடந்தார். இதுபற்றி பொலிசாருக்கு தகவல் கொடுத்தேன்'' என்றார்.

இதையடுத்து நீதிபதி மரண விசாரணையை ஜனவரி 9ம் திகதிக்கு ஒத்திவைத்து தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலை மாவட்டவைத்திய அதிகாரியை பிரேதபரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிஸ் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி திரு. ஆர். எஸ். ஜெயபாலன், சார்ஜண்ட் வி. தியாகராஜா, கான்ஸ்டபிள் செபஸ்தியன் ஆகியோர்கொண்ட பொலிஸ் கோஷ்டி விசாரணை மேற்கொண்டுள்ளது. (கு)

# தர்மபுரம் வீட்டில் ரூ. 35 ஆயிரம் கொள்ளை!

(கிளிநொச்சி)

வீடொன்றில் புகுந்த ஐவர் கொண்ட கொள்ளைக் கோஷ்டியினர் வீட்டிலிருந்தோரைப் பணயம் வைத்து நகை, பணம் உட்பட 35 ஆயிரம் ரூபா பெறுமதியானவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்

இக்கொள்ளைச்சம்பவம் தர்மபுரத்தில் இடம்பெற்றுள்ளது. கடந்த செவ்வாயன்று இரவு 9.30 மணியளவில் வீட்டுச் சொந்தக்காரரும் அவரது மனைவியும் பிள்ளையும் அயல் வீட்டுக்காரரான இரு ஆண்களும் வீட்டு விறாந்தையில் அமர்ந்திருந்து கதைத்துக்கொண்டிருந்த சமயம் திடீரென வந்த ஐந்து கொள்ளையர்கள் துப்பாக்கிமுனையுல் வீட்டிலிருந்த அனைவரையும் பணயம் வைத்து அறைத்திறப்பை வாங்கி பெட்டியில் இருந்த நகைகளையும் ரொக்கம் ஐயாயிரம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு வீட்டு உரிமையாளரின் மனைவியையும் அணுகி காதுத் தோட்டையும் கழற்றி வேண்டிக்கொண்டு சென்றனராம்.

இக்கொள்ளை தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிசில் புகார் செய்யப்பட்டதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி எஸ். பி. ரணசிங்கா, சார்ஜன்ட் என். சண்முகநாதன் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்'' (கு)

## ஜனவரியில் வீதிகள் புனரமைப்பு

(மட்டுவில்)

சாவகச்சேரி நகர வீதிகளின் புனரமைப்பு வேலைகள் ஜனவரி முற்பகுதியில் ஆரம்பமாகும். இவற்றிற்காக ரூபா 4 லட்சம் செலவிடப்படவுள்ளன.

தார்வீதிகள் முதலில் புனரமைப்பு வேலைகள் தொடங்கும் ஆனால் இப்பொழுது பெய்துகொண்டிருக்கும் மழை காரணமாக இந்த வேலைகள் பின்போடப்பட்டுள்ளன என்று நகரசபை செயலாளர் திரு. ரீ. நவரத்தினராஜா தெரிவித்தார். (கு)

மரண விசாரணையில் தற்கொலை:

## மீளாய்வு விசாரணையில் பகிரங்கத் தீர்ப்பு!

(மாவிட்டபுரம்)

மரண விசாரணை நடத்திதற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்ட சம்பவம் ஒன்று குறித்து மல்லாகம் நீதிபதி மீண்டும் மீளாய்வு விசாரணை மேற்கொண்டு அந்த மரணம் குறித்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கியதுடன் விசாரணை நடத்துமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

மல்லாகத்தைச் சேர்ந்த வைரவி பரஞ்சோதி என்னும் குடும்பஸ்தர் மரணமாகி தமது வீட்டு முற்றத்தில் உள்ள மரம் ஒன்றில் சடலமாக தொங்கிய சம்பவம் குறித்து திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எஸ். புண்ணியமூர்த்தி விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கியிருந்தார். இம் மரண விசாரணை தமக்கு திருப்தியில்லை யென்றும் இது ஒரு கொலையென சந்தேகிப்பதாகவும் கூறி இறந்தவரின் தாயார் வைரவி பார்வதி மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மீளாய்வு விசாரணை மீது விசாரணை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி திரு சீ. வி. விக்னேஸ்வரன் இம் மரணம் குறித்து பகிரங்கத் தீர்ப்பு வழங்கினார்.

''யாழ்ப்பாண சட்ட வைத்திய அதிகாரியின் சாட்சியத்தை நீதிமன்றம் ஏற்கிறது. ஆனால் முன்பு பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி முழுமையான முறையில் பிரேத பரிசோதனை நடத்தவில்லையென்பதும் தெரிகிறது. ஆகவே இம்மரணம் குறித்து சந்தேகம்எழுகிறது. தற்கொலை என்ற முடிவுக்கும் வரமுடியாமல் இருக்கிறது. ஆகவே பகிரங்கத் தீர்ப்பு வழங்குகிறேன். சுன்னாகம் பொலிசார் இச்சம்பவம் குறித்து விரிவாக விசாரணை மேற்கொண்டு துப்புத் துலக்குமாறும் உத்தரவிடுகிறேன்'' என நீதிபதி தமது தீர்ப்பின்போதுகுறிப்பிட்டார்.

இறந்தவரின் தாயார் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகியிருந்தார். (கு)

## ''கற்பகம் சஞ்சிகை வெளியிடமுடிவு

(யாழ்ப்பாணம்)

தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 1984ல் மேற்கொள்ளவிருக்கும் அபிவிருத்திவேலைகள் சம்பந்தமான ஆலோசனைக் கருத்தரங்கும் சமாசத்தலைவர் திரு. தி. அமிர்தநாதன் தலைமையில் நடைபெற்றது. சமாசக்காரியாலயத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் சகல தெ. ப. பொ. கூ. சங்கங்களின் தலைவர்களும் பொதுமுகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.

சமாசத்தினால் வெளியிடப்பட்டுவரும் ''கற்பகம்'' பத்திரிகையை 1984-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து சஞ்சிகை அமைப்பில் வெளியிடவிருப்பதாகவும், சங்கங்களினதும், சமூகத்தினதும் குரலாக வெளிவந்துகொண்டிருக்கும் ''கற்பகத்தை'' வரப்படவிருக்கும் சமாசத்தின் நோக்கத்திற்குச் சகல சங்கங்களினதும் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், ஊழியர்கள் சகலரும் தமது மேலான ஒத்துழைப்பை தரவேண்டும் என்றும் திரு. தி. அமிர்தநாதன் கேட்டுக்

( 9ம் பக்கம் பார்...


# விவசாயிகளே!!

உங்கள் நெற்பயிரைத் தாக்கும் எரிவந்தம், வெடிப்பு, கபிலப்புள்ளி, மடற்கொப்புள நோய்களைக் கட்டுப்படுத்த பாவியுங்கள்.

அதிசிறந்த பங்கசு கொல்லி

ஹினோசான் E. C. 50%

(எடின்பென்பொஸ்)

100 மிலி — 31/50, 200 மிலி — 61/75, 450 மிலி — 132/50

இது பல வருடங்களாக உங்களுக்கு சேவையாற்றி ''தமரோன்'', ''அன்ரகோல்'' போன்ற சிறந்த மருந்துவகைகளை தயாரித்து விநியோகிக்கும்

ஹேகெம் லிமிட்டெட் இன்

மற்றும் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.

உங்கள் விநியோகஸ்தர்கள்:

யூனியன் ஏஜென்சீஸ்,
பலாலி ரோட், யாழ்ப்பாணம்.

பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ்,
கிளிநொச்சி.

குளோப் ரேடர்ஸ்,
வவுனியா.


## வவுனியா ...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானமும் நிறைவேறியது.

### கருத்தரங்குகள்

வவுனியா மாவட்ட கல்வித் திணைக்களம்ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவன உதவியுடன் வவுனியா மாவட்ட நான்கு வட்டாரக் கல்வி அதிகாரிகளின் பகுதியிலும் சுகாதாரக் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

சைவப்பிரகாச வித்தியாசாலை, செட்டிகுளம், காமினி வித்தியாலயங்கள், புளியங்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைகளில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.

வவுனியா பகுதியின் சுகாதாரநிலை குடி தண்ணீர் சுகாதாரத் திட்டம் அறிமுகம் விசேட சுகாதாரப் பிரச்னைகளும் வசதிகளும். நீரினால் பரவும் தொற்று நோய்கள், போன்ற தலைப்பில் கருத்துரைகள் வழங்கப்பட்டன. குறித்த கருத்தரங்கு வவுனியா பகுதி ஆசிரியர்களுக்கே நடைபெற்றது. கல்வி சுகாதார திணைக்கள உயர் அதிகாரிகள் கருத்தரங்கில் பங்கு கொண்டு கருத்துக்கள் வழங்கினர்.

வவுனியா கல்வி அதிகாரி திரு. பொ. சோமசுந்தரம், ஜெர்மன் தொழில் நுட்ப நிறுவன பிரதிநிதி திரு. ஜே. ஜெயரத்தினம் ஆகியோர் இது தொடர்பான சகல ஏற்பாடுகளையும் மிகவும் சிறப்பான முறையில் செய்திருந்தனர்.

### சேவை நலம் பாராட்டு

வவுனியா இலங்கை வங்கி முகாமையாளர் திரு. சிறீ கணேஸ்வரன் வெளிநாடு செல்வதையிட்டு அவரது சேவையினை பாராட்டும் வைபவம் ஒன்று அண்மையில் இங்கு நடந்தது வவுனியா வர்த்தகர்களினால் பாராட்டு வைபவம் வவுனியாவில் மிகவும் சிறப்பாக நடந்தேறியது. வவுனியா இலங்கை வங்கியில் கடந்த இரண்டாண்டு காலமாக முகாமையாளராக கடமையாற்றிய திரு. கணேஸ்வரன் லண்டன். பயணமாகவுள்ளார் வவுனியா பிரபல வர்த்தக நிறுவன நிர்வாக அதிபர் திரு. ரி. இராசலிங்கம் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். வைபவத்தில் இலங்கை வங்கி மாவட்ட முகாமையாளர் திரு. சாம் அரியரத்தினம், திரு. எஸ். விவேகானந்தராசா திரு. எஸ். பொன்னம்பலம் திரு.ரி. இராசலிங்கம் ஆகியோர் முகாமையாளரின் சேவைக்கு நன்றி தெரிவித்து பேசினார்கள்.

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமல் - ஸ்ரீபிரியா
**சட்டம் என் கையில்**
(கலர் - புதிய பிரதி)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றாம் பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க நேரமில்லை**

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**சாந்தி** (யாழ் நகர்)
10.30, 2 30, 6 30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே ஆர் விஜயா
நடிப்பால்... படப்பிடிப்பால் இனிய இசையால்...
சிறந்த கதையால்
உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**லிடோ** யாழ். நகர்
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
**நீரும் நெருப்பும்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**ரகசிய பொலீஸ் 115**

**Rajah** JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
6-30 and 8-30
SONDRA CURIE
TONNY YOUNG
**Police Women**
(Color)
An Action - Packed
Karate Thriller
Cold steel on the outside.
All woman on the inside
முழுநீள கராட்டி
சண்டைப்படம்

**வின்ஸர்** (யாழ். நகர்)
இன்று மட்டும்
சர்வர் சுந்தரம்
10-12-83 முதல்
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஓவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**



# திருமண அழைப்பு

மணமகன்:
**அம்பலவாணர் சிவா அமிர்தம்**
மணமகள்:
**மயில்வாகனம் புனிதவதி**
காலம்:
ருதுரோற்காரி வருடம் கார்த்திகை மாதம்
24-ந் திகதி (10-12-1983) சனிக்கிழமை
சுபநேரம்:
காலை 7-00க்கும் 8-15க்கும் இடையுள்ள
சுபமுகூர்த்தம்
இடம்:
நல்லூர் சிவன் கோவில்
நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கிறோம்.
★ தனிப்பட்ட அழைப்புகள் இல்லை ★

தங்கள் நல்வரவை விரும்பும்

திரு. அ. வி. மயில்வாகனம், கோப்பாய் தெற்கு.
திரு. திருமதி சோ. அம்பலவாணர், பன்னாலை.

(10402)



உ
நாளை
# மங்களத் திறப்புவிழா
★ **உமா அச்சகம்** ★



நிகழும் ருதிரோற்காரி
ஆண்டு
கார்த்திகைத்திங்கள்
24-ம் நாள் (10-12-83)
சனிக்கிழமை
முற்பகல் 11-00—12-00
மணிக்கு
இடையில் வரும்
சுபவேளையில்
**திரு. சி. வீ. கே. சிவஞானம்**
(மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்)
அவர்கள்
மங்கள விளக்கேற்றி
ஆரம்பித்து வைப்பார்கள்.



அத்தருணம் வர்த்தகப் பிரமுகர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

தங்கள் நல்வரவை நாடும்
திருமதி அ. அப்புத்துரை,
திரு. திருமதி அ. கதிர்காமநாதன்,
திரு. திருமதி அ. தில்லைநாதன்.

கனகசபை அவென்யு,
(யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை முன் வீதி),
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (10418)


## அபிவிருத்தி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு ஆர். விசுவலிங்கம், ஆலோசக நிதிகம் பனி முகாமையாளர் திரு. வி கார்த்திகேசு இலங்கை வங்கி மு முகாமையாளர் திரு. சி. கே. குணநாயகம் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். (க)


**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**ஆலயமணி**

**Regal** From Today
Daily 10.30 a.m., 2-30,
4-45 and 7-00 p m
Clint Eastwood... in
**The ENFORCER**
Actlon - Packed -Thrilling

வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**


## கற்பகம்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டார்.

சமாசச் செயலாளர் திரு. க. நடராசா கருத்துத் தெரிவிக்கையில் கடந்த காலத்தில் ''கற்பகம்'' பத்திரிகை சமூகத்திற்கும் சங்கங்களுக்கும் ஆற்றியுள்ள சேவை அளப்பரியது. எமது சமூக விரோதிகளின் முகமூடியைக் கிழித்தெறிந்து இனம் காட்டிக் கொடுத்த பெருமை எல்லாம் ''கற்பகத்திற்கு'' உண்டு. பத்திரிகை அமைப்பை விடுத்துச் சஞ்சிகை அமைப்பில் வரவிருக்கும் இவ்வேளையில் ''கற்பகம்'' தனது வளர்ச்சிப்பாதையின் இரண்டாவது கட்டத்தை அடைவதையிட்டு நாம் எல்லாம் பெருமைப்பட வேண்டும்.''


கீரிமலை ஸ்ரீமந் நாராயண சுவாமி
தேவஸ்தானத்துக்கு
## குருக்கள் தேவை

ஆலயத்தில் தங்கியிருந்து பூசை செய்யக்கூடியவரும், நேர்மையும், நற்குணமும், ஒழுக்கமும், பொறுமையுமுடைய சபையால் கட்டுப்பட்டு நடக்கக்கூடிய பிராமணக்குருக்கள் தேவை. மிகுதி விபரத்துக்கு 17-12-83 காலை 9 மணி முதல் 12 மணி வரை நேரில் தேவஸ்தானத்தில் சந்திக்கவும்.

செயலாளர்
தர்மகர்த்தாசபை

10442



வாகனச் சொந்தக்காரருக்கு
## ஒரு வரப்பிரசாதம்

உங்கள் வாகனங்களுக்குத் தேவையான, யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட, சகல வாகனங்களுக்கும் ஏற்ற
25 விதம் பாவித்த ரயர்கள் விற்பனைக்கு உண்டு.

**MAXS DISTRIBUTORS**
மக்ஸ்எஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்
20, யூப்பிலி பஜார், யாழ்ப்பாணம்.
(ராணி சினிமா அருகாமையில்)



# வெற்றிடங்கள்

**மெக்கானிக்குகள் (Mechanics)**
அவுட்போட் மோட்டர் திருத்துவதில்
முன் அனுபவம் பெற்றிருக்கவேண்டும்,

**கொல்லர் (Blacksmiths)**

**பொருத்துனர் (Fitters)**

தரம் 1 – குறைந்தது 3 வருட அனுபவம்
தரம் 2 – முறையான தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள்

மனுச்செய்க
**டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்**
காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பளை.



## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள
நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்
**குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**
கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜேர்மனி
செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த
கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

**CROSS TRAVEL SERVICES (PTE) LTD.**
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு

# 1972 முதல் பதிவுசெய்த 800 பேரில் முதல் நூறு பேருக்கு குழாய் நீர் வழங்கப்படும்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வீடுகளுக்கு குழாய்நீர் பெறுவதற்கு பதிவுசெய்த முதல் நூறு பேரில், இதுவரை குழாய்நீர் பெருதவர்களுக்கு உடன் குழாய்நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்தார்.

போதியளவு குடிநீர் கிடைத்தால், பதிவுசெய்த மற்றவர்களுக்கும், இதைத்தொடர்ந்து குழாய்நீர் வழங்க முயற்சி எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தற்பொழுது குடிநீர் போதியளவு இல்லாததினுலேயே வீதிகளில் அமைத்துள்ள குழாய், நீர்கம்பங்களில் காலையில் ஒருமணிநேரமும், மாலையில் ஒருமணி நேரமும் மட்டும் குடிநீர் வழங்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முதலில் பதிவுசெய்யப்பட்ட 100 பேருக்கு குழாய்நீர் வழங்கியபின்னர் அடுத்த 100 பேருக்கு ஒழுங்குமுறைப்படி குழாய்நீர் வழங்க முயற்சி எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

1972ம் ஆண்டு முதல் இன்றுவரை 800 பேர் குழாய்நீர் பெற பதிவுசெய்திருக்கின்றனர். இந்த 800 பேரில் முதலில் 100 பேரில், இதுவரை குழாய்நீர் பெருதவர்களுக்கே, தற்பொழுது குழாய்நீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க)

## லண்டன் பரீட்சையில் சித்தி

(அரியாலை)

லண்டன் மோட்டார் இன்டஸ்றிஸ் கழகத்தின் 1983 ஆவணி மாதப் பரீசை முடிவுகள் சமீபத்தில் வெளிவந்துள்ளன. இப்பரீட்சையில் யாழ். பரி. யோவான் கல்லூரி தன்னியக்கப் பொறியியற் பிரிவு மாணவர்களான ஏ. ஆர். ஆர். சிங்கராசா, கே. கங்காதரன், எஸ். சிறிஜெயன் ஆகியோர் சித்திபெற்றுள்ளனர்.

லண்டன் சிற்றி கில்ட் கழகத்தின் பரீட்சையில் ஏ. ஆர். ஆர். சிங்கராசா கே. கங்காதரன் எஸ். சத்தியநாதன் ஆகியோர் சித்திபெற்றுள்ளனர். (கு)

## சபையில் ஏற்பட்ட

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொடி உரையாற்றும்போது "இரு அமைச்சர்களும் இங்கு இல்லை. நான் என்ன செய்வது" என்ருர்.

அமைச்சர் வின்சன்ட் பெரேரா: நீங்கள் விவாதத்தை ஆரம்பிக்கலாம்.

லக்ஷ்மன்: நான் அவருடன்தான் பேசவேண்டும். உங்களுடன் அல்ல.

வழக்கமாக 10.15க்கே விவாதம் ஆரம்பமாகும். நேற்று 10-13க்கு அமைச்சரும் பிரதி அமைச்சரும் சபைக்குள் நுழைந்தனர்.

லக்ஷ்மன்: நல்வரவாகட்டும்.

தொண்டமான்: கவலைப்படாதீர்கள். நான் இங்குதான் இருக்கிறேன். [கி-கு]

## ரூ. 6 லட்சம் கொள்ளை!

[கொழும்பு]

டாக்ஸியில் வந்த 6 இளைஞர்கள் வீட்டிலிருந்த இரு பெண்களை கட்டிவைத்துவிட்டு 6லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பம்பலப்பிட்டி கில்பிரட் பிளேஸிலுள்ள இல்லத்தில் இடம் பெற்றது.

கொழும்பிலுள்ள வியாபார நிறுவனமொன்றின் சொந்தக்காரரான மணியம் என்பவர் இது குறித்து பம்பலப்பிட்டி பொலிஸில் புகார் செய்துள்ளார். இ-வெ

## மேலதிக .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வந்திருக்கிருர்கள். மேலதிக செயலாளர் ஒருவர் லிபியாவில் இனப்பிரச்னை பற்றி பேசியிருக்கிருர். இவர் அயர்லாந்துக்கும் சென்று வந்திருக்கலாம். நான் இதனைப் பெரிதாக நினைக்கவில்லை. ஆனுல் மக்கள் இதை விரும்பவில்லை.

'அமைச்சரின் அனுமதியுடன் மத்திய கிழக்கிற்கு திருமலைத் துறைமுகத்தினூடாக கால்நடைகள் ஏற்றுமதி செய்ய முயற்சிகள் நடைபெற்றன. மாதுறு ஓயா பகுதியிலிருந்து கால்நடைகளும் கொண்டுவரப்பட்டன. இறைச்சிக்காகவே ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாகக் கூறப்பட்டது.

"அமைச்சர் சிறந்த பக்தியுள்ளவர். இந்துசமயத்தைச் சேர்ந்தவர். இறைச்சிக்காக ஒருபோதும் கால்நடைகள் ஏற்றுமதிசெய்ய யோசித்திருக்கமாட்டார். இந்த கால்நடை ஏற்றுமதியில் ஏதோ தவறு நடந்திருக்கிறது. பௌத்த மக்கள் இதனைக் கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளார்கள்.

'கால்நடை வளர்ப்புக்காக அவை ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக அமைச்சர் தொண்டமான் குறிப்பிட்டார். அமைச்சரவையின் அனுமதியுடன் காணி அபிவிருத்தி அமைச்சர் இதனைத் தடை செய்தார். இந்த கால்நடைகள் இறைச்சிக்காக அனுப்பப்படவிருந்ததாக ராஜாங்க அமைச்சர் பத்திரிகையாளர்களுக்கு விளக்கமளித்தார். எனவே அமைச்சர் இதுபற்றி சபையில் விளக்கமளிக்கவேண்டும்" (இ-கு)

# இப்படியும் நடக்கிறது

பெற்ருேர் நிச்சயித்த திருமண ஏற்பாடு அது.

மணமகன் 'பிரான்ஸ்', மணமகள் யாழ்ப்பாணம்.

ஒருவரை ஒருவர் நேரில் சந்தித்ததில்லை. கடிதப் போக்குவரத்தும் கிடையாது. இருவரினதும் பெற்ருேர் கூடி, 'நாள்-கோள்' பார்த்து முடிவுசெய்திருந்தனர்.

மணமகள் திருமணத்துக்குத் தேவையான நகைகளுடன் அங்கு சென்று உறவினர்கள், நண்பர்கள் புடைசூழ தாலி கட்டவேண்டும். இதுதான் ஏற்பாடு.

அந்த மணமகளும் குறிப்பிட்ட தினத்தன்று விமான நிலையம் சென்று, 'வழமை'யான விதிமுறைகளை அனுசரித்து 'ஓ கே' பெற்றுக்கொண்டிருந்த நேரத்தில், ஓர் அதிகாரி வந்து, 'பிரயாணம்செய்ய அனுமதிக்கமுடியாது'' என்று கூறினுராம் அப்பெண் காரணம் கேட்டபோது; ''இத்தனை நகைகளையும் கொண்டுபோகமுடியாது. இது கடத்தல் முயற்சி போன்றது'' என்று பதிலளித்தாராம். அந்தப் பெண்ணும் விடவில்லை ''அப்படியானுல் நகைகளைக் கழற்றி வெளியில் நிற்கும் உறவினர்களிடம் ஒப்படைத்துவிடுகின்றேன்... பிரயாணத்துக்கு அனுமதியுங்கள்'' என்று கெஞ்சினுராம் அதற்கும் அந்த அதிகாரி இணங்குவதாகத் தெரியவில்லை! இது ஒரு கடத்தல் முயற்சி என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாராம்:

ஒரு கொடி, சில வளையல்கள், ஒரு சங்கிலி, காதில் தோடு. இவைகள்தான் அந்த நகைகள்.

இறுதியில் என்ன நடந்தது? அத்தனை நகைகளுடனும் மணப்பெண் சொந்த ஊர் திரும்பியிருக்கிருர்.

-"ஊடுருவி"

## உதவிப் பொலிஸ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி வாலிபர் அக்டோபர் 20-ம் திகதி பொலிசில் சரண் புகுந்தாரா? அல்லது நவம்பர் 26-ம் திகதிதான் பொலிசார் அவரைக் கைது செய்தார்களா? என்பது தொடர்பாக பிரச்னை எழுந்தது.

இது தொடர்பாக சுன்னுகம் பொலிசார் நடந்துகொண்ட விதம்பற்றிஆராய்ந்துஅறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. யோககுமாருக்கு மல்லாகம் நீதிபதி அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்டிருந்தார். ஆனுல் இம்மனு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டபோது, யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் நீதிமன்றத்தில் சமூகமளிக்கவில்லை.

அவர் சில அவசர அலுவல்கள் காரணமாக வரத்தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும், அவர் எப்படியாவது வருவாரெனவும் சுன்னுகம் பொலிஸ் சார்ஜன்ட் வி. சிவலிங்கம் தெரிவித்தார். இதையடுத்து நீதிபதி அவர் வருவதற்கு அவகாசம் வழங்கியபோதும் அவர் வந்து சேராமையால் அவருக்கு 'வாரண்ட்' பிறப்பித்து அதன் பிரதியைப் பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்டார். மேற்படி மனுதார்சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜராகி இருந்தார்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக் கழக விவசாயபீட புதிய மாணவர்களின் விசேட கூட்டம் நாளை சனிக்கிழமை காலை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருக்கிறது. புதிய மாணவர்கள் சகலரும் பங்குபற்றுமாறு வேண்டப்படுகின்றனர். (க)

## தொலைபேசி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை பாவித்திருக்கின்ருர் என்றும் தெரியவந்துள்ளது.

இது சம்பந்தமாக தொலைதொடர்பு திணைக்களத்தைச் சேர்ந்த இரு ஊழியர்கள் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

# இடம்பெயர்ந்த மாணவர் நிலை பெற்ருேர் ஆராய்வர்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக மாணவர்களின் நிலை குறித்து ஆராய்வதற்காக மாணவர்களின் பெற்ருேர் நாளை சனிக்கிழமை காலை யாழ். றிம்மர் மண்டபத்தில் கூடவுள்ளனர்.

இடம்பெயர்ந்த பல்கலைக் கழக தமிழ் மாணவர்களின் கோரிக்கையை மாணவர்களின் பெற்ருேருக்கு விளக்கவும், தென்னிலங்கை பல்கலைக்கழகங்களில் இதுவரை தமிழ் மாணவர்கள் எதிர்நோக்கிய பிரச்னைகளையும், பல்கலைக்கழகங்களுக்கு திரும்பிச் சென்ருல் தாம் எவ்வகையில் பாதிப்புக்கு உள்ளாக்கப்படலாம் என்பதை விபரமாக தெரிவிப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட அனைத்து பல்கலைக்கழக தமிழ் மாணவர்களையும் தமிழ் பகுதிகளில் தமது மேற்படிப்பை தொடர இனிமேல் எடுக்கப்போகும் நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வதற்காகவும்கூட்டப்பட்டுள்ள இக்கூட்டத்தில் கலந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை தெரிவிக்கும்படி அனைத்து தமிழ் பெற்ருேர்களையும் இடம்பெயர்ந்த பல்கலைக்கழகதமிழ்மாணவர் ஒன்றியத்தினர் கேட்டுள்ளனர். (கு)

## மரக் கடத்தல் எதிரிகளுக்குபிணை

(சாவகச்சேரி)

மன்னுரில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச், சட்டவிரோதமாக 48 சமண்டலை மரப்பலகைகளை கற்களால் மூடிமறைத்துக்கொண்டு வரப்பட்டபோது ஆனையிறவு தடைமுகாமில் வனபரிபாலன அதிகாரி க. பாலரஞ்சனுல் கண்டுபிடிக்கப்பட்டது.

மரக்கடத்தலில் ஈடுபட்டிருந்த பெ. கேதீஸ்வரன் ம. செல்வம் ஆகிய இருவரையும் வனபரிபாலன அதிகாரி சாவகச்சேரி நீதிமன்ற நீதவான் திரு. எஸ் யோகசிகாமணி முன்னிலையில் ஆஜர் செய்தார். நீதவான் இரு எதிரிகளையும் தலா 3000 பிணையிலும், லொறியினை ரூபா 60 ஆயிரம் பிணையிலும் விட்டு மேல்விசாரணையை ஒத்திவைத்தார்.

## இரகசிய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. சத்வால் தெரிவித்தார்.

தமது தூதரகரத்தின் மூலம் இந்த விஷயம் எதுவும் இந்தியாவின் கவனத்திற்குக் கொண்டுவரப் படவில்லையென்றும் திரு. சத்வால் கூறினுர். (வெ)

## வெற்றி தோல்வி இல்லை

(கொழும்பு)

சிம்பாப்வேகிரிக்கெட் கோஷ்டிக்கும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் கோஷ்டிக்குமிடையே மொறட்டுவவில் நடைபெற்றுவந்த மூன்றுநாள் கிரிக்கெட்போட்டி நேற்று வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

சிம்பாப்வே கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 210 ஓட்டங்களையும், இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கட்டுகள் இழப்பிற்கு 133ஓட்டங்களையும்எடுத்தது.

இலங்கை கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 146 ஓட்டங்களைப் பெற்றது (வெ)

## மரண அறிவித்தல்

### றிச்சேட் MANN

உடுவிலைச் சேர்ந்தவரும் திருநெல்வேலி அரசாங்க விவசாய பாடசாலையில் இருந்து இளைப்பாறிய றிச்சி MANN காலமானுர். இவர் சுசீரதத்தின் அன்புக் கணவரும், ரபீந்திரன் MANN (Janatha Estate Development Board கொழும்பு), மகேந்திரன் MANN (C. T. B. கோண்டாவில்), மனோகரி MANN (ஆசிரியை மானிப்பாய் மெமோறியல்), தயாகரி MANN (ஆசிரியை றிம்மர் Hall) ஆகியோரின் தந்தையும், கருணு, சிவகாமி ஆகியோரின் மாமனுரும் ஆவார். பூதவுடல் வெள்ளிக்கிழமை 9ம் திகதி மாலை 3 மணிக்கு நல்லடக்கத்திற்காக உடுவில் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். 10456

## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் பொன்னம்பலம்

(விவேகானந்தா மகா வித்தியாலயம்-கொழும்பு, யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னுள் ஆசிரியர்,)

இளைப்பாறிய ஆசிரியர் ஆறுமுகம் பொன்னம்பலம் காலமானுர் இவர் கமலாம்பிகையின் அன்புக் கணவரும், கமலநாயகி, பாலகுமார் (பொறியியலாளர் அமெரிக்கா), சகுந்தரராசா (சவுதி அரேபியா), நந்தகுமார் (ரவி) (ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி), சுரேந்திராதேவி, அருணுதேவி, ராஜகுமார் (இந்துக்கல்லூரி) புவேந்திரகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சிவகுரு, சின்னத்தங்கம், திருநாமம், ராசம்மா, சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சௌபாக்கியவதி, வரதராஜா (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பாலசுந்தரம், ரெத்தினுவதியின் சகலனும் ஆவர்.

ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு—கொக்குவில். 10455

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம், [illegible] வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu P. O. Box 49. Telephone 22389 — 24126.